


34 ஆவது ஆண்டில்
Tel: 416-282-8059
# விளம்பரம்
கனடாவின் மூத்த தமிழ் இதழ்
email: vlambaram@sympatico.ca www.vlambaram.com




நதி: 34 பாலம்: 11 | சமூக முன்னேற்றப்பத்திரிகை | மாதமிருமுறை | இலவசம் | JUNE 01, 2024

# சர்வதேச குற்றவியல் நீதிமன்றத்தின் முன் இஸ்ரேல், ஹமாஸ் தலைவர்கள்!




இஸ்ரேல் மற்றும் பாலஸ்தீனியப் போராளிக் குழுவான ஹமாஸ் தலைவர்கள் போர்க் குற்றங்கள் மற்றும் மனித குலத்திற்கு எதிரான குற்றங்களுக்குப் பொறுப்பானோர் என்ற குற்றச்சாட்டின் பேரில் ‘சர்வதேச குற்றவியல் நீதிமன்றத்தின் சர்வதேச கைது ஆணைக்கு’ விரைவில் உட்படலாம்.

மே 20, 2024ஆம் நாள் சர்வதேச குற்றவியல் நீதிமன்றத்தின் (International Criminal Court) தலைமைச் சட்டத்தரணி கரீம் கான் (Karim Khan), இஸ்ரேல் பிரதமர் பெஞ்சமின் நெதன்யாகு (Benjamin Netanyahu) மற்றும் இஸ்ரேல் பாதுகாப்பு அமைச்சர் யோவ் கலண்ட் (Yoav Gallant) ஆகியோருக்கு எதிராக ஒக்ரோபர் 7இல் ஹமாஸ், இஸ்ரேலில் நடத்திய தாக்குதலுக்குப் பதிலடியாக காஸாவின்மீது போரை அறிவித்ததில் இருந்து அவர்கள் செய்த பல குற்றங்களை குற்றம்சாட்டி சர்வதேச குற்றவியல் நீதிமன்றத்தில் சர்வதேச கைது ஆணையைக் கோரினார்.

அத்துடன் கரீம் கான், ஹமாஸ் தலைவர் யஹ்யா சின்வார் (Yahya Sinwar) ஹமாஸின் இராணுவப் பிரிவின் தளபதி முகமது தியாப் இப்ராஹிம் (Mohammed Diab Ibrahim). (இவர் முகமது டெய்ஃப் (Mohammed Deif) எனவும் அழைக்கப்படுவார்.) மற்றும் ஹமாஸின் அரசியல் பிரிவின் தலைவர் இஸ்மாயில் ஹனியே (Ismail Haniyeh) ஆகியோருக்கு எதிராக இஸ்ரேல் மற்றும் காஸாவில் அவர்கள் செய்த பல குற்றங்களைக் குற்றம்சாட்டி சர்வதேச குற்றவியல் நீதிமன்றத்தில் சர்வதேச கைது ஆணையைக் கோரினார்.

சட்டத்தரணி கரீம் கான் ஊடகங்களுக்கு விடுத்த அறிக்கையில், இவர்கள் ஐவரும் கடந்த ஏழு மாதங்களாக இஸ்ரேல் மற்றும் காஸாவில் நடந்துவரும் போரில் போர்க்குற்றங்கள் மற்றும் மனித குலத்திற்கு எதிரான குற்றங்களுக்குப் (Crimes against humanity) பொறுப்பானோர் என தான் நம்புவதாகத் தெரிவித்துள்ளார்.


Karim A. A. Khan KC

சட்டத்தரணி கரீம் கானின் இந்தக் கோரிக்கையை சர்வதேச குற்றவியல் நீதிமன்றத்தின் மூன்று நீதிபதிகளைக் கொண்ட குழு விசாரிக்கும். அவர்கள் அடுத்த இரண்டு மாதங்களும் சாட்சியங்களைப் பரிசீலித்து இந்தக் கோரிக்கையின்மீது மேற்கொண்டு நடவடிக்கை எடுக்க முடியுமா எனத் தீர்மானிப்பர்.

கரீம் கான் இஸ்ரேலிய நடவடிக்கைகளைப் பற்றிக் குறிப்பிடுகையில் “காஸாவின் பொதுமக்களுக்கு எதிரான பேரழிவுகரமான தாக்குதல்கள் மற்றும் கூட்டுத் தண்டனையுடன் (Collective Punishment) பட்டினியையும் (Starvation) ஒரு போர் முறையாகப் பயன்படுத்துவதன் விளைவுகள் கடுமையானவையாக இருக்கின்றன. அத்துடன் எல்லோரும் அவற்றை தற்போது அறிந்துள்ளனர். குழந்தைகள், சிறுவர்கள் மற்றும் பெண்கள் உட்பட பாலஸ்தீன மக்களிடையே ஊட்டச்சத்துக் குறைபாடு (malnutrition), நீரிழப்பு (dehydration), ஆழ்ந்த வேதனையை அனுபவித்தல் (profound suffering) மற்றும் அதிகரித்துவரும் இறப்புகள் ஆகியவை இவற்றின் விளைவுகளாகும்” என்றார்.




கரீம் கான் ஒக்ரோபர் 7இல் ஹமாஸ் நடத்திய தாக்குதல்கள் பற்றிக் குறிப்பிடுகையில் தான் டிசெம்பர் மாதத்தில் இத்தாக்குதல்கள் நடைபெற்ற பகுதிக்குப் பிரயாணம் செய்ததைக் கூறி அங்கு இந்தத் தாக்குதல்களின் பேரழிவு தரும் காட்சிகளைப் பார்த்ததாகவும், அவற்றை சர்வதேச குற்றவியல் நீதி மன்றத்திற்கு வழங்கிய சாட்சியங்களில் தெரிவித்துள்ளதாகவும் கூறினார். “உயிர் பிழைத்தோருடன் உரையாடுகையில், ஒரு குடும்பத்திற்குள் இருக்கும் அன்பு, பெற்றோருக்கும் குழந்தைக்கும் இடையே உள்ள ஆழமான பிணைப்புகள், அவர்கள் மீது கொடுமை மற்றும் தீவிரமான அடாவடித்தனம் (extreme callousness) செய்யப்படும் போது எவ்வாறு அளவிட முடியாத வலியை அவை ஏற்படுத்துகின்றன என்பதை நேரில் தெரிந்து கொண்டேன்” என்றார்.




ஐக்கிய நாடுகள் சபையும், பிற உதவி நிறுவனங்களும் போர் நடைபெறும் இடங்களில் பொதுமக்களுக்கு உதவி வழங்குவதற்கு இஸ்ரேல் இடையூறாக இருப்பதாக மீண்டும், மீண்டும் குற்றம் சாட்டி வருகின்றன. இதை மறுத்துள்ள இஸ்ரேலிய அரசு காஸாவினுள் உதவி வழங்குவதில் எந்தத் தடையும் இல்லை என்றும், ஐக்கிய நாடுகள் சபையே உதவிகளை விநியோகிக்கத் தவறிவிட்டதாகவும் குற்றம் சாட்டியுள்ளது. இதை மறுத்துள்ள ஐக்கியநாடுகள் சபை தமது உதவிப் பணியாளர்கள் பலமுறை இஸ்ரேலிய துப்பாக்கிச் சூட்டுக்கு ஆளாகியுள்ளனர் என்றும் மேலும் நடந்து வரும் சண்டை மற்றும் பாதுகாப்பு வழங்க முடியாமை போன்றவற்றால் பொது மக்களுக்கு உதவி வழங்கல் தடைப்பட்டுள்ளதாகவும் கூறுகிறது.




இஸ்ரேலிய தலைவர்களுக்கு எதிராக சர்வதேச குற்றவியல் நீதிமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டுள்ள சர்வதேச கைது ஆணை தொடர்பாகக் கருத்துத் தெரிவித்த

தொடர்ச்சி 05 பக்கம்






# 25

## மொழிகளில் எமது சேவைகள்

வெளிநாடுகள் மற்றும்
கனடாவின்
பிற பகுதிகளிலிருந்து
ஒன்ராறியோவிற்கு (Toronto
உட்பட) வருபவர்களின் ஆதன
சிறப்பு தேவைகளை வாடகைக்கு
(நீண்ட காலம் மற்றும் குறுகிய
காலம்) பெற்று தர, ஆதனங்களை
வாங்குவதற்கு (purchase), தகுந்த
அறை நண்பரை (Roommate) பெற்று
தர தகுந்த ஆலோசனை பெற
எமது
நிறுவனத்தை அணுகவும்.

# Office Unit for Sale





**Don't miss the unit.**

**EXCELLENT OPPORTUNITY TO HAVE YOUR OWN OFFICE.**

*Please contact ...*

HOMELIFE
HIGHER STANDARDS

**HomeLife/GTA Realty Inc. Brokerage***

5215 Finch Ave. E. Suite 203, Toronto, ON. M1S OC2

**Tel: 416-321-6969**

* Independently owned and operated.



Available Till Midnight
Including Weekends & Holidays

ANTON
DHARMASEELAN
MORTGAE AGENT

#1 Mortgage Agent in GTA
#2 in Canada

CALL ME FIRST
FOR ALL YOUR MORTGAGE NEEDS

PURCHASE
REFINANCE
SELF EMPLOYED
BAD CREDIT
INVESTMENT PROPERTY
RENEWAL

MAJOR BANKS
ALTERNATIVE LENDERS
B LENDERS
CREDIT UNIONS
TRUST COMPANIES
PRIVATE LENDERS

416 704 1200

anton@myhomemls.ca

MORTGAGE ALLIANCE
Broker # 10530
#200, 2005 Sheppard Ave. E.
Toronto, ON M2J 5B4

FAX: 1 866 566 3068

# தலையைப் பிய்க்கும் கேள்விகள்

**- அரவின் -**

ஜனாதிபதித் தேர்தலை நோக்கி எல்லாத் தரப்புகளும் இயங்கிக் கொண்டிருக்க, ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க மட்டும், யாருக்கும் பிடி கொடுக்காமல் நழுவிக் கொண்டிருக்கிறார்.

ஐக்கிய மக்கள் சக்தியின் வேட்பாளராக, சஜித் பிரேமதாச தெரிவு செய்யப்பட்டு விட்டார். தேசிய மக்கள் சக்தியின் வேட்பாளர் அனுரகுமார திசநாயக்க பிரசாரங்களையே தொடங்கிவிட்டார்.

மணப்பெண்ணைத் தேடாமலேயே திருமணத்துக்குத் திகதி குறித்ததுபோல, யார் வேட்பாளர் என்று இன்னமும் அறிவிக்காத, தங்களிடம் பொருத்தமான வேட்பாளர் இல்லை என்று வெட்கப்படாமல் கூறிய, பொதுஜன பெரமுனவே, தேர்தல் பிரசாரத்தைத் தொடங்கிவிட்டது.

இப்படிப் பல தரப்புகள், ஜனாதிபதித் தேர்தலைக் குறிவைத்து நகர்ந்து கொண்டிருக்க, ரணில் விக்கிரமசிங்க மட்டும் அமைதியாக இருக்கிறார்.

அவர் ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிடப் போவதாகவும் அறிவிக்கவில்லை. போட்டியிடமாட்டேன் என்றும் கூறவில்லை.இந்தச் சந்தர்ப்பத்தைப் பயன்படுத்திக்கொண்டு, ரணில் விக்கிரமசிங்கவை அசைத்துப் பார்க்க முயன்றிருந்தார், பசில் ராஜபக்ச.

அவர் அமெரிக்காவில் இருந்து திரும்பிய பின்னர், ஆறேழு தடவைகள் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவைச் சந்தித்து விட்டார். ஒவ்வொரு முறையும் அவர், ஜனாதிபதித் தேர்தலை நடத்துவதற்கு முன்னர், நாடாளுமன்றத்தைக் கலைத்து பொதுத்தேர்தலை நடத்துமாறு கோரினார். ஆனால் ரணில் அசைந்து கொடுக்கவில்லை. ஜே.ஆரின் வாரிசு அல்லவா அவர்.

ஒரு கட்டத்தில், பசிலின் நச்சரிப்பைத் தாங்க முடியாத ரணில் விக்கிரமசிங்க- நாடாளுமன்றத்தில் உள்ள பெரும்பான்மை உறுப்பினர்களின், அதாவது 113 எம்.பிக்களின் கையெழுத்தை வாங்கி வாருங்கள், நாடாளுமன்றத்தைக் கலைக்கிறேன் என்று கூறி அனுப்பினார்.

அதற்குப் பின்னர் பசில் திரும்பவும் ரணிலைச் சந்திக்கவேயில்லை. அவர் திரும்பி வரமாட்டார் என்பதும் ரணிலுக்குத் தெரியும்.

பசில் ராஜபக்சவினால், நாடாளு



மன்றத்தைக் கலைப்பதற்கு வலியுறுத்தி, 113 நாடாளுமன்ற உறுப்பினர்களின் கையெழுத்தைப் பெற முடியவில்லை. பொதுஜன பெரமுனவிடம், அதைவிட அதிக எண்ணிக்கையான உறுப்பினர்கள் இருந்தபோதும், அவர்களிடம், பசில் ராஜபக்சவினால் கையெழுத்துப்பெற முடியாமல் போயிருக்கிறது.

இது ரணிலுக்கு முன்னரே தெரிந்திருந்தது. அதனால்தான், பசிலுக்கு செக் வைக்கும் வகையில், 113 எம்.பிக்களின் கையெழுத்தைப் பெற்று வருமாறு அனுப்பி வைத்திருந்தார்.

நாடாளுமன்றத்தைக் கலைப்பதற்கு ஆதரவாக 113 உறுப்பினர்களின் கையெழுத்தை பெறமுடியாமல் போனது, ராஜபக்சவினரின் முக்கியமான ஒரு தோல்வி.

எத்தனை கட்சிகளை, எத்தனை தலைவர்களை, தாங்கள் நினைத்தவாறு பிளவு படுத்தித் தூக்கி எறிந்து, தங்களுக்கு வசதியான சூழலை ஏற்படுத்திய, தாங்கள் விரும்பியபடி சட்டங்களை நிறைவேற்றிய ராஜபக்சவினரின், கண்ணில் விரலை வைத்து ஆட்டிக் கொண்டிருக்கிறார் ரணில்.

ஆனாலும் விழுந்தும் மீசையில் மண் ஒட்டவில்லை என்பதுபோல, “பொதுத் தேர்தலை முதலில் நடத்துமாறு ஜனாதிபதியிடம், கோரிக்கை எதனையும் பொதுஜன பெரமுன முன்வைக்கவில்லை. பொதுத் தேர்தலை முதலில் நடத்துவது நல்லது என்ற கட்சியின் கருத்தை மட்டுமே தெரிவித்தோம்” என பொதுஜன பெரமுனவின், பொதுச்செயலாளர் சாகர காரியவசம், கூறியிருக்கிறார்.

கடைசியாகச் சந்தித்தபோது, பசில் ராஜபக்சவிடம், ஜூன் 14ஆம் திகதிக்குப் பின்னர் தனது நிலைப்பாட்டை வெளிப் படுத்துவேன் என்று கூறி அனுப்பி யிருந்தார் ஜனாதிபதி ரணில்.

அதனால் இப்போது எல்லோரும், ஜூன் நடுப்பகுதியில், ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க, ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிடப் போவது குறித்து அறிவிப்பார் என்று எதிர்பார்த்துக் கொண்டிருக்கின்றனர்.

ஜூன் நடுப்பகுதியில் பலருக்கும் அதிர்ச்சி காத்திருப்பதாக அரசியல் வட்டாரங்களில் ஒரு பேச்சு அடிபடுகிறது.

பொதுஜன பெரமுனவின் 113 உறுப்பினர்களிடம், பசில் ராஜபக்சவினால் கையெழுத்து வாங்க முடியாமல் போனதற்கும் இதற்கும் தொடர்பு இருக்கிறது.

பொதுஜன பெரமுனவின் உறுப்பினர்கள் பலரும் இப்போது. ராஜபக்சவினரின் முழுக் கட்டுப்பாட்டில் இல்லை. அவர்களில் பலர் ரணில் விக்கிரமசிங்கவை ஆதரிக்கின்றனர். வெளிப்படையாக ஆதரிப்போர் சிலர்தான் என்றாலும், அவ்வாறு ஆதரிப்போரின் சரியான எண்ணிக்கை யாருக்கும் தெரியாது.

அவர்கள் தான் நாடாளுமன்றத்தைக் கலைப்பதற்கு, ஆதரவாகக் கையெழுத்திடுவதற்கு மறுப்புத் தெரிவித்திருக்கின்றனர்.

அவர்கள், ஜூன் நடுப்பகுதியில், ரணில் விக்கிரமசிங்க வேட்பாளராக அறிவிக்கப் படும்போது வெளிப்படையாக அவருக்கு ஆதரவு வெளியிடுவர் என்று அரசியல் வட்டாரங்களில் பேசப்படுகிறது.

அதாவது பொதுஜன பெரமுன ரணில் விக்கிரமசிங்கவை வேட்பாளராக அறிவிக்க முன்வந்தாலும் சரி, முன்வராமல் போனாலும் சரி, அவர்கள் ரணில் பக்கம் நின்று கொள்வர்.

அப்படியான நிலையில், பொதுஜன பெரமுன வேறு வழியின்றி, ரணிலை ஆதரிக்க வேண்டிய நிலைக்குத் தள்ளப்படும். அல்லது தனித்து வேட்பாளரை அறிவிக்க நேரிடும்.

இப்போது பொதுஜன பெரமுனவுக்கு தலைமை தாங்குவது ராஜபக்சவினரா அல்லது ரணில் விக்கிரமசிங்கவா என்று உதய கம்மன்பில வெளியிட்டிருக்கின்ற சந்தேகம் நியாயமானதாகவே படுகிறது.

இந்த நிலைமை பொதுஜன பெரமுனவுக்கு மாத்திரமல்ல, சிறிலங்கா சுதந்திரக் கட்சிக்கும் இருக்கிறது. ஐக்கிய மக்கள் சக்திக்கும் இருக்கிறது. அதிகம் ஏன், தமிழ்த் தேசியக் கட்சிகளுக்குள்ளே கூட இருப்பதாகச் சொல்லப்படுகிறது.

சிறிலங்கா சுதந்திரக் கட்சி இப்போது எத்தனை துண்டுகளாக இருக்கிறது என்று யாருக்கும் தெரியாது. அதற்கு யார் தலைவர் என்றும் தெரியாது. மாறி மாறி ஒவ்வொருவரும் நீதிமன்றத்திடம் தடை கோரிக் கொண்டிருக்க, அந்தக் கட்சி சந்திரிகாவின் கண்ணுக்கு முன்பாகவே கரையத் தொடங்கியிருக்கிறது. குரங்கின் கையில் பூமாலையைக் கொடுத்தவர் அவர் தானே.

அதேவேளை, சஜித் பிரேமதாசவின் ஐக்கிய மக்கள் சக்திக்குள் இருந்தும் பலர், ரணில் பக்கம் தாவவுள்ளனர் என்ற தகவல்களும் வருகின்றன. அவர்கள் மே தின மேடையில் ரணிலுடன் இணைவர் என்று கூறப்பட்டது. ஆனால் யாரும் இணையவில்லை.

இப்போது, ஜூன் 14ஆம் திகதிக்குப் பின்னர் இந்த அணி தாவல் நடக்கும் என்ற எதிர்பார்ப்பு எகிறியிருக்கிறது. இது நடக்கலாம், நடக்காமலும் போகலாம்.

இவ்வாறான நிலையில் ஐதேக பொதுச் செயலாளர் பாலித ரங்கே பண்டார, மற்றொரு புரளியைக் கிளப்பியிருக்கிறார். ஜனாதிபதி மற்றும் நாடாளுமன்றத்தில் பதவிக்காலத்தை 2 ஆண்டுகளுக்கு நீடிக்கும் சர்வஜன வாக்கெடுப்பை நடத்த வேண்டும் என்று அவர் யோசனையை முன்வைத்திருக்கிறார்.

இது, முதலில் ஜனாதிபதித் தேர்தலா, பொதுத் தேர்தலா என்று தலையைப் பிய்த்துக் கொண்டிருந்தோருக்கு, திகைப்பை ஏற்படுத்தியிருக்கிறது.

நாடாளுமன்றம் கலைக்கப்படுமா, ரணில் விக்கிரமசிங்க தனது அரசியல் நிலைப்பாட்டை வெளிப்படுத்துவாரா? பொதுஜன பெரமுன ஒரு வேட்பாளரை நிறுத்துமா? ஜனாதிபதித் தேர்தலுக்கு முன்னர் பொதுத் தேர்தல் நடத்தப்படுமா? இல்லை, சர்வ ஜன வாக்கெடுப்பு நடத்தப்பட்டு இரண்டுமே பிற்போடப்படுமா? என்று தலையைக் குழப்பும் கேள்விகள் பல எழுந்திருக்கின்றன.

ஜூன் நடுப்பகுதியில் இந்தக் கேள்விகளில் சிலவற்றுக்காவது விடை கிடைக்கும் என்றே நம்பலாம்.

அதேவேளை, இவ்வாறு பல கேள்விகளை எழுப்ப வைத்துவிட்டு, ரணில் விக்கிரமசிங்க தனது செல்வாக்கைப் பரப்புகின்ற வேலையைக் கச்சிதமாக முன்னெடுத்துக் கொண்டிருக்கிறார்.

அவர் விரிக்கும் வலையைப் புரிந்து கொள்ளாமலேயே, தமிழ் அரசியல்வாதிகள் பலரும், அதில் விழத் தொடங்கியிருக்கின்றனர் போலவே தெரிகிறது.




விளம்பரம்
VLAMBARAM
34ஆவது ஆண்டில்
பதிப்பாளர்: ராஜா மகேந்திரன்
ஆசிரியர்: சத்தியா மகேந்திரன்
முகாமையாளர்: கமல் செல்லையா
ஊடகப் பொறுப்பாளர்: விஜய் செல்லையா
அலுவலக பொறுப்பாளர்: சுதர்சினி D.
'விளம்பரம் பப்ளிகேஷன்ஸ் இங்' நிறுவனத்தால் வெளியிடப்படும் 'விளம்பரம்' பத்திரிகையில் பிரசுரிக்கப்படும் ஆக்கங்களுக்கு எழுத்தாளர்களும், விளம்பரங்களுக்கு விளம்பரதாரர்களுமே பொறுப்பாளர்கள். விளம்பரம் பத்திரிகையில் பிரசுரிக்கப்படும் ஆக்கங்களை முழுமையாகவோ அல்லது பகுதியாகவோ ஆசிரியரின் அனுமதியின்றி மறுபிரசுரம் செய்தலாகாது.
Vlambaram Publications Inc.
GTA Square, 5215 Finch Ave. E.,
#201, Toronto, ON M1S 0C2, Canada
TEL: 416-282-8059
email:vlambaram@sympatico.ca
web: www.vlambaram.com
Vlambaram Publications Inc. 2020 All Rights Reserved

# சர்வதேச...

01ஆம் பக்கத்தொடர்ச்சி

இஸ்ரேலிய வெளியுறவு அமைச்சர் இஸ்ரேல் காட்ஸ் (Israel Katz) "இஸ்ரேலிய தலைவர்களுக்கு எதிராக சர்வதேச கைது ஆணையைக் கோரியுள்ள சர்வதேச குற்றவியல் நீதி மன்ற தலைமைச் சட்டத்தரணியின் முடிவு என்றென்றும் நினைவு கூரப்படும் ஒரு வரலாற்று அவமானம்" என்றார். அத்துடன் அவர் இத்தகைய நடவடிக்கைக்கு எதிராகப் போராடுவதற்கு ஒரு சிறப்புக் குழுவை உருவாக்குவதாகவும், இஸ்ரேலின் தலைவர்கள்மீது இத்தகைய உத்தரவுகள் அமல்படுத்தப்படாமல் இருப்பதை உறுதி செய்ய உலகத் தலைவர்களுடன் இணைந்து செயல்படப் போவதாகவும் கூறினார்.



Israeli Prime Minister Benjamin Netanyahu, and Hamas leader Yahya Sinwar

பெஞ்சமின் நெதன்யாகு மற்றும் யோவ் கலண்ட் உடன் இஸ்ரேலின் போர் அமைச்சரவையின் உறுப்பினராகவும் இருப்பவரும் இஸ்ரேலின் முன்னாள் இராணுவத்தலைவருமான பென்னி கான்ட்ஸ் (Benny Gantz) சர்வதேச குற்றவியல் நீதிமன்றத்தில் சர்வதேச கைது ஆணையைக் கோரிய கரீம் கானின் அறிவிப்பைக் கடுமையாக விமர்சித்தார். அவர், "இஸ்ரேல் மிகவும் கடுமையான தார்மீக நெறிமுறைகளுடன் போராடுகிறது, அத்துடன் தன்னை விசாரிக்கும் திறன் கொண்ட வலுவான நீதித்துறையைக் கொண்டுள்ளது. ஒக்ரோபர் 7இல் பயங்கரவாதிகளான ஹமாஸினால் நிகழ்த்தப்பட்ட, கண்டிக்கத்தக்க படுகொலையைத் தொடர்ந்து நவீன வரலாற்றில் நடத்தப்பட்ட நியாயமான போர்களில் ஒன்றை இஸ்ரேலிய அரசு நடத்தி வருகிறது" என்றார்.

பென்னி கான்ட்ஸ் மேலும் தெரிவிக்கையில், "சர்வதேச கைது ஆணைக்கு விண்ணப்பித்த சட்டத்தரணியின் நிலைப்பாடு, தலைமுறைகளாக நினைவு கூரப்பட வேண்டிய வரலாற்றில் குறிப்பிடக்கூடிய குற்றமாகும்" என்றார்.

ஹமாஸ் தலைவர்களுக்கு எதிராக சர்வதேச குற்றவியல் நீதிமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டுள்ள சர்வதேச கைது ஆணையை ஹமாஸ் போராளிக் குழு கண்டனம் செய்தது. அவர்களது அறிக்கையில், சர்வதேச குற்றவியல் நீதிமன்றத்தின் தலைமைச் சட்டத்தரணி பாதிக்கப்பட்டோரையும் மற்றும் கொலை செய்வோரையும் சமப்படுத்திப் பார்ப்பதாகக் குற்றம்சாட்டியுள்ளனர். அத்துடன் இஸ்ரேலிய ஆக்கிரமிப்பை எதிர்க்கும் உரிமை தமக்கு உண்டு எனவும் தெரிவித்துள்ளனர்.

அவ்வறிக்கையில் இரண்டு இஸ்ரேலியத் தலைவர்களை மட்டுமே கைது செய்ய நீதிமன்றத்தில் கோரியுள்ளதை விமர்சித்து மற்றைய இஸ்ரேலியத் தலைவர்கள் மீதும் சர்வதேச கைது ஆணை பிறப்பிக்கப்பட வேண்டும் என்று கோரியுள்ளது.

ஹமாஸ் தலைவர்களான யஹ்யா



Deputy Prime Minister Chrystia Freeland

சின்வார் மற்றும் முகமது டெய்ஃப் இருவரும் காஸாவிலேயே பதுங்கியிருப்பதாக நம்பப்படுகிறது. இஸ்ரேலிய அரசு அவர்களைத் தேடிக்கண்டுப்பிடிக்க தீவிர முயற்சி எடுத்து வருகிறது. இஸ்லாமிய போராளிக் குழுவின் அதிஉயர் தலைவரான (Supreme Leader) இஸ்மாயில் ஹனியே கத்தாரில் (Qatar) இருந்து கொண்டு அப்பகுதி முழுவதும் பிரயாணம் செய்து வருகிறார்.

ஒக்ரோபர் 7இல் ஹமாஸ் இஸ்ரேலில் நடத்திய தாக்குதலில் 1,200 பேர்வரை கொல்லப்பட்டதாகவும், அவர்களில் பெரும் பாலானோர் பொதுமக்கள் எனவும், 250 பேர்வரை கைதிகளாகப் பிடிக்கப்பட்டதாகவும், அவர்களில் 100 பேர்வரையில் இன்னும் விடுவிக்கப்படவில்லை எனவும் இஸ்ரேலிய அரசு தெரிவிக்கிறது. இதே வேளை ஒக்ரோபர் 7இல் இருந்து காஸா மீது இஸ்ரேல் நடத்திவரும் தாக்குதலில் இதுவரை 35 ஆயிரம் பேருக்கு மேல் கொல்லப்பட்டுள்ளதாகவும் அவர்களில் அரைவாசிக்கு மேற்பட்டோர் பெண்களும், குழந்தைகளும் என காஸா சுகாதார சேவை தெரிவிக்கிறது.

சர்வதேச குற்றவியல் நீதிமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டுள்ள சர்வதேச கைது ஆணை தொடர்பாக பல நிறுவனங்களும், நாடுகளும் கருத்துத் தெரிவித்துள்ளன.

மனித உரிமைகள் கண்காணிப்பகம் (Human Rights Watch) விடுத்துள்ள அறிக்கையில், "சர்வதேச கைது ஆணையைக் கோரிய சட்டத்தரணியின் கொள்கைரீதியான முதல்படி இது. இஸ்ரேல் மற்றும் பாலஸ்தீனத்தில் கடுமையான துஷ்பிரயோகங்களால் பாதிக்கப்பட்டோர் பல தசாப்தங்களாக தண்டனையின்மையின் சுவரை எதிர்கொண்டு வந்துள்ளனர். சமீபத்திய மாதங்களில் நடந்த அட்டூழியங்களுக்குப் பொறுப்பானோருக்கு நியாயமான விசாரணையில் அவர்களின் செயல்களுக்குப் பதிலளிக்க இது கதவைத் திறக்கிறது. கரீம் கானின் கோரிக்கையை சர்வதேச குற்றவியல் நீதிமன்ற நீதிபதிகள் பரிசீலிக்கும்போது அவர்கள் மீது விரோத அழுத்தம் (Hostile pressure) அதிகரிக்க



வாய்ப்புள்ளதால் நீதிமன்றத்தின் சுதந்திரத்தை உறுதியுடன் பாதுகாக்க சர்வதேச குற்றவியல் நீதிமன்றத்தின் 124 உறுப்பு நாடுகளும் தயாராக இருக்க வேண்டும்" எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

"இஸ்ரேலிய அதிகாரிகள் மற்றும் ஹமாஸ் மீதான சர்வதேச கைது ஆணைக்காக சர்வதேச குற்றவியல் நீதிமன்றத்தின் தலைமைச் சட்டத்தரணி சமர்ப்பித்துள்ள விண்ணப்பத்தை அமெரிக்கா நிராகரிக்கிறது" என அமெரிக்க வெளி யுறவுத் துறை அமைச்சர் அன்ரனி பிளிங்கன் (Antony Blinken) அறிக்கை ஒன்றை ஊடகங்களுக்கு வெளியிட்டுள்ளார்.

"நான் ஒன்றைத் தெளிவாக விளக்க விரும்புகிறேன். சர்வதேச குற்றவியல் நீதிமன்றத்தின் தலைமைச் சட்டத்தரணி எதனைக் கருத்தில்கொண்டு இவ் விண்ணப்பத்தை சமர்ப்பித்திருந்தாலும், இஸ்ரேலுக்கும் ஹமாஸிற்கும் இடையில் எந்தவித சமத்துவமும் இல்லை" என அமெரிக்க அதிபர் ஜோ பைடன் (Joe Biden) அறிக்கை ஒன்றை ஊடகங்களுக்கு வெளியிட்டுள்ளார்.

மே 21இல் ஊடகவியலாளர் மாநாட்டில் கனடியப் பிரதமர் ஜஸ்ரின் ரூடோ தெரிவிக்கையில், "சர்வதேச குற்றவியல் நீதிமன்றத்தில் இஸ்ரேல் மற்றும் ஹமாஸ் தலைவர்களுக்கு ஒரே நேரத்தில் சர்வதேச கைது ஆணை கோருவது கவலையளிக்கிறது. எல்லோரும் சர்வதேச சட்டத்தை மதித்து கடைப்பிடிப்பது எவ்வளவு முக்கியம் என்பதை நான் ஆரம்பத்தில் இருந்தே கூறிவருகிறேன். இஸ்ரேலின் ஜனநாயகரீதியில் தேர்ந்தெடுக்கப்பட்ட தலைவர்களுக்கும், ஹமாஸை வழிநடத்தும் இரத்த வெறிபிடித்த பயங்கரவாதிகளுக்கும் (Bloodthirsty terrorists) இடையே உள்ள சமத்துவ உணர்வை நான் கவலைக்குரியதாகக் கூறுவேன். இது உதவிக்கரமாக இருக்கும் என நான் நினைக்கவில்லை" என்றார்.

"அனைத்துத் தரப்பினரும் சர்வதேச சட்டத்திற்குக் கட்டுப்படுவதை உறுதி செய்ய வேண்டும். சர்வதேச குற்றவியல் நீதிமன்றத்தின் சுதந்திரத்தை கனடா மதித்து வருகிறது. நாங்கள் அதன் செயல்முறையை உன்னிப்பாகக் கண்காணித்து வருகிறோம்" என கனடிய மத்திய அரசின் வெளியுறவு அமைச்சர் மெலனி ஜோலி (Melanie Joly) மே 21ஆம் திகதி கனடிய நாடாளுமன்றத்திற்கு வெளியே ஊடகவியலாளர்களுக்குத் தெரிவித்தார்.

"சர்வதேச குற்றவியல் நீதிமன்றத்தை ஒரு முக்கிய நிறுவனமாக கனடா மதிக்கிறது. ஆனால், இஸ்ரேலின் ஜனநாயகத்



Minister of Foreign Affairs Melanie Joly

தலைவர்களை ஹமாஸின் பயங்கரவாதத் தலைவர்களுடன் ஒப்பிடுவது பொருத்தமற்றது" என கனடிய மத்திய அரசின் துணைப்பிரதமர் கிறிஸ்டியா ஃப்ரீலண்ட் (Chrystia Freeland) ஊடகங்களுக்குத் தெரிவித்தார்.

கனடியப் பழமைவாதக் கட்சியின் வெளிநாட்டு விவகாரங்கள் தொடர்பாக விமர்சிக்கும் மைக்கல் சொங் (Michael Chong) கருத்துத் தெரிவிக்கையில், "இஸ்ரேலிய தலைவர்களுக்கு எதிரான சர்வதேச கைது ஆணைக்கோரிக்கை அட்டூழியமானது. ஜனநாயக முறையில் தேர்ந்தெடுக்கப்பட்டோர் இஸ்ரேலிய தலைவர்கள். அவர்களுக்கும் எதேச்சதிகார (autocratic), இனப்படு கொலை செய்யும் ஹமாஸ் பயங்கரவாதிகளுக்கும் இடையே பிழையாக சமத்துவம் காட்டுவது தவறு. பழமைவாதக் கட்சியினர் அதை சந்தேகத்திற்கு இடமின்றி நிராகரிக்கின்றனர்." என்றார்.

2024 மார்ச் மாதத்தில் லிபரல் மற்றும் புதிய ஜனநாயகக் கட்சி உறுப்பினர்களும் சேர்ந்து சர்வதேச நீதிமன்றம் (ICJ) மற்றும் சர்வதேச குற்றவியல் நீதிமன்றம் (ICC) இரண்டினதும் பணிகளை கனடா ஆதரிக்க வேண்டும் என ஒரு தீர்மானத்தை கனடிய நாடாளுமன்றத்தில் நிறைவேற்றியிருந்தனர். புதிய ஜனநாயகக் கட்சித் தலைவர் ஜக்மீத் சிங் கருத்துத் தெரிவிக்கையில், "கனடா தலைமைத் துவத்தைக் காட்ட வேண்டும். சர்வதேச குற்றவியல் நீதிமன்றம் எந்த முடிவை எடுத்தாலும் நாம் அதைச் செயல்படுத்துவோம் என, கனடா தெளிவாகக் கூற வேண்டும்" என்றார்.



# குட்டையைக் குழப்பிய சம்பந்தன்

**– முகிலன் –**

"ஜனாதிபதித் தேர்தலில் தமிழ் பொது வேட்பாளரை நிறுத்துவது ஒஸ்லோ உடன்பாட்டை மீறுவதாக அமையும். ஏனென்றால், ஒஸ்லோ உடன்பாட்டில் இலங்கை அரசாங்கம் சமஷ்டி அடிப்படையிலான பேச்சுக்குத் தயார் என்றே கூறியுள்ளது. ஆகவே பொதுவேட்பாளர் ஒருவரைக் களமிறக்குவதன் ஊடாக, அந்த உடன்பாட்டைத் தூக்கியெறிந்து செயற்பட முடியாது." இப்படி ஒரு கருத்தை வெளியிட்டு குட்டையைக் குழப்பி இருக்கிறார் மூத்த தமிழ் அரசியல் தலைவரான இரா. சம்பந்தன்.

ஜனாதிபதித் தேர்தலுக்கான வேட்பாளர்களைத் தீர்மானிப்பதில் தென்னிலங்கை அரசியல் தரப்புகள் தீவிரமாக இயங்கிக் கொண்டிருக்கின்ற சூழலில், தமிழ் தரப்பில் இரண்டு விதமான பகிரங்க நிலைப்பாடுகள் குறித்து விவாதங்கள் நடந்து கொண்டிருக்கின்றன.

தமிழ் தேசிய மக்கள் முன்னணி ஜனாதிபதித் தேர்தலைப் புறக்கணிப்பது தான் சரியான முடிவு என்று முடிவெடுத்து செயற்பட்டு வருகிறது.

இந்த முடிவுடன் இணங்காத தமிழ்க் கட்சிகளும், சிவில் அமைப்புகளும் தமிழ் பொது வேட்பாளர் ஒருவரை நிறுத்துவதற்குத் திட்டமிட்டிருக்கின்றன. இது தொடர்பாகப் பல்வேறு இடங்களில் பல்வேறு தரப்புகளுடன் கலந்துரையாடல்கள் நடத்தப்பட்டிருந்தன.

அதன் அடிப்படையில் தமிழ் பொது வேட்பாளர் ஒருவரை நிறுத்துவது தொடர்பான முடிவுகளை எடுக்கின்ற கட்டம்வரை இந்த நகர்வு முன்னோக்கிச் சென்றும் இருந்தது.

இலங்கை தமிழரசுக் கட்சி மாத்திரம் இவ்விடயத்தில் ஒதுங்கி ஒதுங்கியே இருந்து வந்தது. அக்கட்சியில் நாடாளுமன்ற உறுப்பினர் எம்.ஏ. சுமந்திரன் தமிழ் பொது வேட்பாளர் நிலைப்பாட்டை கடுமையாக எதிர்ப்பதாகக் கூறியிருந்தார்.

அதேவேளை மாவை சேனாதிராசா, சிறிதரன் போன்றோர் தமிழ் பொது வேட்பாளர் என்ற யோசனைக்கு ஆதரவான கருத்துகளையே வெளியிட்டிருந்தனர். இவ்வாறான நிலையில், தமிழ் பொது வேட்பாளரை நிறுத்துவதற்குத் தீர்மானித்துள்ள ஜனநாயக தமிழ்த் தேசியக் கூட்டணி, தமிழ் மக்கள் கூட்டணி மற்றும் சிவில் அமைப்புகள் என்பன தமிழ் அரசு கட்சியின் தலைவர்களுடனும் கலந்துரையாடி இருந்தன.

இதன்போது இரண்டு வாரத்துக்குள் கட்சியின் மத்திய செயற்குழுக் கூட்டத்தில் கலந்துரையாடி முடிவெடுப்பதாக மாவை



சேனாதிராசாவும் சிறிதரனும் கூறியிருந்தனர். இவ்வாறான நிலையில்தான், இரா. சம்பந்தன் ஒஸ்லோ உடன்படிக்கைக்கு இது எதிரானது என்று கூறியிருந்தார். இதன்பின்னர் தமிழரசுக் கட்சியின் செயற்குழுக் கூட்டம், தமிழ் பொது வேட்பாளர் குறித்து எந்த முடிவும் எடுக்கப்படாமல் முடிவுக்கு வந்திருக்கிறது. அக்கூட்டத்தில் எந்த முடிவும் எடுக்கப்படவில்லை என்றே முதலில் அறிவிக்கப்பட்டது.

இப்போது ரணில், சஜித், அனுர ஆகிய மூவரையும் சமதூரத்தில் வைத்திருப்பதெனவும், அவர்களின் தேர்தல் அறிக்கை வெளியானதும், முடிவெடுக்கலாம் என தீர்மானிக்கப்பட்டதாகவும் கூறியிருக்கிறார் சுமந்திரன்.

ஒஸ்லோ பிரகடனம் அல்லது உடன்படிக்கை என்று கூறி, தமிழ் வேட்பாளர் விவகாரத்தை அமுக்கியிருக்கிறார் இரா. சம்பந்தன்.

ஒஸ்லோ உடன்படிக்கை என்றால் அது விடுதலைப் புலிகளுடன் தொடர்புடையது. யாரும் அதுபற்றி வாய்திறக்க மாட்டார்கள் என்பதே அவரது திட்டம்.

ஆனால் ஒஸ்லோ உடன்பாடு என எதுவும் கிடையாது. பிரகடனம் என்று கூறுவதும் தவறானது. அவ்வாறு கூறி சில அரசியல் ஆய்வாளர்கள் குழப்பத்தை ஏற்படுத்துவதாக விடுதலைப் புலிகளின் தத்துவாசிரியரும், அரசியல் ஆலோசகருமான அன்ரன் பாலசிங்கம், போரும் சமாதானமும் என்ற தனது நூலில் தெளிவாகக் கூறியிருக்கிறார்.

"விடுதலைப் புலிகளின் தலைமை தெரிவித்த ஒரு யோசனைக்கு இசைவாக, உள்ளக சுய நிர்ணய உரிமைக் கோட்பாட்டின் அடிப்படையில், தமிழ் பேசும் மக்களின் வரலாற்றுத் தாயகத்தில், ஐக்கியமான இலங்கைக்குள், சமஸ்டி ஆட்சி முறை தழுவிய தீர்வு ஒன்றை ஆராய்ந்து பார்ப்பதற்கு இரண்டு தரப்பிலும் இணக்கம் காணப்பட்டது."

இதுதான் ஒஸ்லோவில் 2002ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் மூன்றாம் கட்ட பேச்சுக்களின்போது, எட்டப்பட்ட இணக்கப்பாடு.

பேச்சுக்களின் முடிவில், தானும் அரச பேச்சுக் குழுத் தலைவர் ஜி.எல்.பீரிசும் இணைந்து இந்தத் தீர்மான வாசகங்களை உறுதி செய்ததாக அன்ரன் பாலசிங்கம் தனது நூலில் தெளிவாகக் கூறியிருக்கிறார்.

ஒன்றுபட்ட இலங்கைக்குள் உள்ளக சுய நிர்ணய உரிமையுடன் கூடிய சமஸ்டி தீர்வு ஒன்றை ஆராய்ந்து பார்ப்பதற்கு மாத்திரமே இணக்கம் காணப்பட்டதே தவிர உள்ளக சுயநிர்ணய உரிமையின் அடிப்படையிலான சமஸ்டிக்கு விடுதலைப் புலிகள் இணக்கம் தெரிவிக்கவுமில்லை. அதனை வழங்குவதாக இலங்கை அரசு உறுதியளிக்கவும் இல்லை.

இப்படியிருக்க, இலங்கை அரசு உள்ளக சுயநிர்ணய அடிப்படையில் சமஸ்டி தீர்வு குறித்து பேச்சுக்குத் தயார் என்று கூறி இருப்பதாகவும், பொது வேட்பாளரை நிறுத்துவது அதற்கு எதிரானது என்றும், மொட்டந்தலைக்கும், முழங்காலுக்கும் முடிச்சுப் போட்டிருக்கிறார் இரா. சம்பந்தன்.

இரா. சம்பந்தன் இதனைக் கூறினாரா, இதனைக் கூறக் கூடிய நிலையில் அவர் இருக்கிறாரா? என்ற சந்தேகம் பரவலாக இருக்கிறது. அவர் முதுமையின் இயல்பான பிரச்சினைகளுக்குள் சிக்கியிருக்கிறார்.

இந்தச் சூழலைப் பயன்படுத்திக்கொண்டு சுமந்திரன் போன்றோர் தங்களின் கருத்தை அவரது கருத்தாக வெளிப்படுத்துகின்றனர் என்ற சந்தேகமும் பரவலாகக் காணப்படுகிறது.

எவ்வாறாயினும் இந்தக் கருத்து இரா. சம்பந்தனின் பெயரிலேயே வந்திருக்கிறது. அதனை அவர் மறுக்கவுமில்லை. அதனால் அவரை நோக்கி எதிர்வினைகள் வருகின்றன.

அதைவிட, ஒஸ்லோவில் உள்ளக சுயநிர்ணய உரிமை அடிப்படையில் பேசுவதற்கு இலங்கை அரசு முன் வந்தது, 22 ஆண்டுகளுக்கு முன்னர். அந்த இணக்கப்பாட்டை, இப்போது இலங்கை அரசு முறையாகப் பின்பற்றும் என, அவர் நம்பிக் கொண்டிருந்தால், அது அபத்தம்.

போர் முடிந்த பின்னர், இரா. சம்பந்தன் தலைமையிலான கூட்டமைப்புடன் அரசாங்கம் பேச்சு நடத்தியபோது என்ன நடந்தது? சமஷ்டி தீர்வு குறித்துப் பேசினரா? அல்லது வேறு ஏதும் தீர்வையாவது முன்வைத்தனரா? எதுவும் கிடையாது.

நிலைமை இப்படி இருக்க ஒஸ்லோ உடன்படிக்கை என்று, இந்த விவகாரம் திட்டமிட்டு திசை திருப்பப்பட்டிருக்கிறது.

தமிழ் அரசுக் கட்சி இல்லாவிட்டால் என்ன, ஏனைய தமிழ் கட்சிகள் ஒன்றிணைந்து தமிழ் பொது வேட்பாளர் என்ற திட்டத்தை முன்னெடுக்கலாம் தானே? என்ற கேள்வி உங்கள் முன் வரலாம்.

அவர்கள் தாங்களாக எதையும் தலைமை தாங்கிச் செய்து பழக்கப்படாதோர். சம்பந்தன், சுமந்திரனை நம்பியே கடந்த 15 ஆண்டுகளாக வாழ்ந்து பழகியவர்கள்.

இப்படி ஒரு கொள்கை ரீதியான முடிவை வெற்றிகரமாகச் செயற்படுத்த முடியுமா என்ற சந்தேகம் அவர்களுக்கு இருக்கிறது. இந்தச் சந்தேகத்துக்கு மத்தியில் அவர்கள், ஒரு தமிழ் பொது வேட்பாளரை நிறுத்துவதில் இணக்கப்பாட்டை எட்டுவார்களா, இல்லையா என்பதை இப்போது கூற முடியாது.

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க, யாழ்ப்பாணத்தில் நாடாளுமன்ற உறுப்பினர் சி.வி.விக்னேஸ்வரனின் வீடு தேடிச் சென்று, தமிழ் மக்களால் ஒற்றுமையாக ஒரு பொது வேட்பாளரை நிறுத்த முடியாது என்று ஏளனமாக சவால் விட்டுச் சென்றது அதனால்தான்.

ஒஸ்லோ உடன்படிக்கை இதுவரை தமிழருக்கு எதையும் கொடுக்கவில்லை, இனிமேலும் கொடுக்கப் போவதில்லை. ஆனால் இதனை வைத்து, குட்டையைக் குழப்பி விட்டார் இரா.சம்பந்தன் என்பது மட்டும் உண்மை.






# இலங்கைத் தமிழர் இடப்பெயர்வும் கல்வியும்



பேராசிரியர் மா. சின்னத்தம்பி

கடந்த இதழ் தொடர்ச்சி...

பின்தங்கிய பிரதேசங்களில் 1AB வகைப் பாடசாலைகள் அதிகம் செயற்படுவதில்லை. 1C வகைப் பாடசாலைகளில் அனுமதி பெற்று கலைப்பிரிவில் அல்லது வர்த்தகப் பிரிவில் பல்கலைக்கழகம் நுழைவதுதான் எளிய மக்களுக்கும், பின்தங்கிய பிரதேசங்களில் வாழும் மக்களுக்கும் சாத்தியமானது.

தரப்படுத்தல், கலைப்பிரிவுகளில் (BA பட்டம்), வர்த்தகப் பிரிவு (B.Com., BBA பட்டங்கள்) கீழ்தட்டு மக்களுக்கு உயர் கல்வி வாய்ப்புத் தொடர்பாக அதிகளவு நன்மைகளைச் செய்ததாக வன்னிப் பிரதேச பட்டதாரிகள் பலரது ஆய்வுகள் வெளிப்படுத்தின. தரப்படுத்தல் பெரியளவுக்கு மேட்டுக்குடியினருக்கே பாதகமாயிருந்ததென்ற கருத்துக்களும் வெளிப்படுத்தப்பட்டன. தமிழரிடையிலும் இந்த வகை ஏற்றத்தாழ்வு உயர்கல்வியில் நிலவி வருவது குறிப்பிடத்தக்கதாகும். தரப்படுத்தல் எவ்வாறு அரசியல் காற்றினுள் அகப்பட்டது என்ற கேள்வியும் விடை தேடி அலைகிறது.

* 1991இல் இலங்கை இராணுவம் தீவகப் பிரதேசம் முழுவதையும் கைப்பற்றி அனைத்து தீவக மக்களும் வெளியேறுமாறு கட்டாயப்படுத்தப்பட்டனர். இதே போல் இதே காலத்தில் வலிகாமம் வடக்கு பிரதேசத்திலிருந்தும் கட்டாயமாக வெளியேற்றப்பட்டனர். 1996 ஏப்ரல் மாதம் வரை இது தொடர்ந்தது.

வெளியேறிய மக்கள் கொழும்பு, வவுனியா, குடாநாட்டின் பலபகுதிகளுக்கும் சென்று குடியேறி நிரந்தர வதிவிடவாளர்களாகி விட்டனர்.

கொழும்பில் தொடர்மாடி வீடுகளில் கூட்டம் கூட்டமாக வாழ்வதற்குப் பழகிக் கொண்டனர். நகர்ப்புற தொகுப்பு வீடுகளை மையப்படுத்திய நகரக் கலாசாரத்திற்குள் இரண்டறக்கலந்து விட்டனர். 1960களில் கொழும்பு நகரில் குடியேறிய இலங்கைத் தமிழர் 1990களில் குடியேறியவர்களை ஏளனத்துடனும், தரக்குறைவாகவும் பார்க்கத் தொடங்கினர். மதிப்புக் குறைவானவர்கள்போல் நடத்தத் தொடங்கினர்.

காலத்தால் பிந்தி ஒரு புவியியல் பிரதேசத்தில் குடியேறுபவர்களை குறைமதிப்புடன் அணுகும் பழக்கம் கனடாவாழ் தமிழரிடமும் அதிகமுள்ளது என்கின்றனர்.

கொழும்பில் தமிழ்மொழிமூலப் பாடசாலைகள் நிரம்பி வழிந்தன. தனியார் ரியூட்டரிகள் நிரம்பி வழிந்தன. வீடுகளுக்கு வளைவுகளும் விளையாட்டு நிலங்களும் இல்லாததால் கட்டிளமைப் பருவத்து மாணவர்கள் வீதிகளிலும், தேநீர் மற்றும் குளிர்பான நிலையங்களிலும் அதிகநேரம் செலவிட்டனர். தாராளமாக சுய செலவுகளையும் செய்தனர். புதிய நட்புகளும், புதிய மொழிப்பண்பாடுகளும், புதிய குழு நடத்தைகளும் இலங்கைத் தமிழ் இளைஞர்களிடம் வளரலாயின.

கொழும்பு நகரில் கல்வி வியாபாரம் (Education Business) உச்சம் தொட்டது. பல திறமையான ஆசிரியர்கள் அரச தொழிலை நிறுத்தி விட்டு, முழுநேர ரியூசன் எஜமானர்களாக ஜொலித்தனர்.

வெளிநாடுகளில் வாழும் குடும்பங்கள் தமது பெற்றோர், சகோதரர்களுக்குப் பாதுகாப்பான வாழ்வு கொடுக்கும் உன்னத இலட்சியத்துடன் தொடர்மாடி வீடுகளைக் கொள்வனவு செய்து கொடுத்தனர். பிள்ளைகளின் ஆடைகளுக்கும், படிப்பிற்கும், கைச் செலவுக்கும் தொடர்ந்து பணம் அனுப்பினர்.

கொடும்பனியில் உழைத்து அனுப்பிய அந்நியச் செலவாணி வடக்கு கிழக்கில் செறிந்து விடாமல், கொழும்பின் தொடர்மாடி வீடுகளும், கல்வி நிலையங்களும் அதைத் தடுத்து தமதாக்கிக் கொண்டன. தொடர்மாடி வீடுகளை தொழில் முறையில் நிர்மாணிக்கும் புதிய இளம் பொறியியலாளர் தமிழர் அணியும் கொழும்பில் வளர்ச்சியுற்றது. இது சாதகமான வளர்ச்சியாகுமா?

வடக்குக் கிழக்குப் பள்ளிப்பருவத்து மாணவர்கள் கொழும்புப் பகுதி கல்வி நிறுவனங்களில் குவிந்தபோது, தென்னிலங்கையைச் சேர்ந்த வேலையற்ற ஏராளமான இளைஞர்கள் சிப்பாய்களாகி பெருந்தொகையாக வடக்கு கிழக்கில் வாழத்தலைப்பட்டனர். செழிப்புமிக்க செம்மண் நிலங்களில் நீண்ட காலம் வாழும் வாழ்க்கை அவர்களுக்கு கிட்டியது.

இத்தகைய பிராந்தியங்களிடையில் நிகழ்ந்த இளைஞர் மற்றும் குடும்பங்களின் இடப்பெயர்வு இலங்கையின் புதிய குடியமைப்பையும், கல்வி மாறுதல்களையும் ஏற்படுத்தின.

மிகவும் அண்மையில் (2024, மார்ச்) இடம்பெயர்ந்த மக்கள் முப்பத்து மூன்று வருடங்களுக்குப் பிறகு தாம் வாழ்ந்த வலிகாமம் வீடுகளுக்குத் திரும்பிச் செல்ல அனுமதிக்கப்பட்டனர். கைவிடப்பட்டு தூர்ந்துபோன வீடுகளையும், கோவில்களையும், பள்ளிகளையும் பார்த்து ஏங்கித் தவித்தனர்.

தீவக மக்கள் நாட்டின் பல பகுதிகளிலும் நிரந்தரக் குடியிருப்புக்களை ஏற்படுத்தினர். வெளிநாட்டு உறவினர் நிதியுதவி மூலம் நிலம், வீடுகள், வாகனங்கள் கொள்வனவு செய்து புதிய வாழ்வை நிலை நிறுத்தினர்.

* 1996இல் தீவகத்துக்குத் திரும்பிச் செல்வதற்கும் வாழ்வதற்கும் அரசாங்கம் அறிவித்த போதும் இடம்பெயர்ந்தவர்களில் 10 - 15 சதவீதத்தினர் மாத்திரமே மீண்டும் தீவகம் திரும்பினர். கடல் வழியாகப் போக்குவரத்துச் செய்யும் நிலையிலிருந்த நயினாதீவு, நெடுந்தீவு, அனலைதீவு, எழுவைதீவு மக்கள் பெருமளவுக்கு வெளிநாடுகளுக்கே சென்று நிரந்தரக் குடியுரிமை பெறலாயினர். இந்தத் தீவுகளில் பாடசாலைகளும் கல்வியும் பலவீனமானவர்களுக்குரிய பலவீனமான ஏற்பாடாகவே தொடர்ந்தது.



இடம்பெயர்ந்தவர்கள் குடியேறிய பகுதிகளில் சொத்துக்களை வாங்குவதற்கு வெளிநாட்டிலிருந்தே பணம் அதிகம் அனுப்பப்பட்டது. வெளிநாடுகளில் ஏற்கனவே குடியேறிய யாழ்ப்பாண, வலிகாமப் பகுதி மக்கள் தமது முன்னைய வாழிட காணிகளையும், வீடுகளையும் தீவக, வலிகாம இடம்பெயர்ந்தோருக்கு விற்பனை செய்தனர். இந்தக் கைமாற்றங்களும், பணக் கைமாறல்களும் வெளிநாடுகளிலேயே அதிகம் நிகழ்ந்தன. அந்நியச் செலவாணியிலேயே நிகழ்ந்தன. இதே போல் வெளிநாட்டு பல்கலைக்கழகங்களில் படிப்பதற்கும் தீவக, வலிகாமம் வலய குடும்ப உறுப்பினர்களுக்கு உறவினர்கள் அதிகம் உதவினர்.

இத்தகைய சொத்து, கல்வி தொடர்பான கைமாற்றங்களும், முன்னேற்றங்களும் இடப்பெயர்வு, வெளிநாட்டு உழைப்பு தொடர்பாக அதிகம் நிகழ்ந்தமை அதிக கவனத்துக்கு உரியன.

தீவகத்தில் இயங்கிவந்த 77 பாடசாலைகளில் 63 பாடசாலைகளே 2016இல் இயங்கின. 14 பாடசாலைகள் நிரந்தரமாக மூடப்பட்டு விட்டன. ஆனால், யாழ்ப்பாண நகரப் பாடசாலைகளில் அனுமதிகள் புதிய நெருக்கடிகளை எதிர்கொள்ள தீவக மாணவர் தொகையும் ஒரு காரணமாகும். தீவக ஆசிரியர் தொடர்பாக புதிய சமூகவியல் நெருக்கடி ஏற்பட்டதாக உணரப்பட்டது.

"தீவகத்தில் கற்பிப்பதற்கு தீவகத்தைப் பிறப்பிடமாகக் கொண்ட பட்டதாரிகள் விருப்பம் குறைவாயிருக்கின்ற நிலையில், ஆசிரியர் பதவியைத் தக்கவைத்துக் கொள்வதற்காகவும், குறித்த காலத்தில் பொருத்தமான இடத்திற்கு செல்லலாம் என்ற நிலையிலுமே, வெளிப்பட்டதாரிகள் உட்பட ஏனைய ஆசிரியர்கள் தீவகப் பாடசாலைகளில் தற்போது கற்பித்து வருகின்றனர்." பேராசிரியர் கா. குகபாலன், (தீவகம் - தொன்மையும், மேன்மையும் பக்கம் - 138, 2017)

1996இல் விடுதலைப்புலிகள் யாழ்ப்பாணம், வலிகாமம் பகுதிகளிலிருந்து அனைவரும் வெளியேறி விடவேண்டும் என்றனர். யுத்த உபாயமாக இந்தக் கட்டாய வெளியேற்றம் அமைந்தது. மக்கள் தென்மராட்சிக்கும் வடமராட்சிக்கும் அகதிகள்போல் கிடைத்ததை எடுத்துக்கொண்டு குடும்பம், குடும்பமாக பெயர்ந்தனர்.

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம் சாவகச்சேரி இந்துக் கல்லூரியில் இயங்கியது. அதன் நிர்வாகம் மாத்திரமே செயல்பட்டது. கல்விச் செயற்பாடுகள் அரைகுறையாக நிகழ்ந்தன. பாடசாலை மாணவர்கள் தென்மராட்சியிலும், வடமராட்சியிலும் இயங்கிய பாடசாலைகள் பலவற்றிலும் இணைந்து படித்தனர். கல்விச் செயல்பாடு சிதைவுற்றவாறே பெயரளவில் நிகழ்ந்தது.

இராணுவம் யாழ்ப்பாணத்தைக் கைப்பற்றியபோது மீண்டும் இடம்பெயர்ந்த மக்களில் ஒரு பகுதியினர் திரும்பி வந்தனர். இராணுவ முகாம்களில் பரிசோதனைகள் பலவற்றை எதிர்கொண்டு மாணவர்களும், ஆசிரியர்களும் பள்ளிக்கூடங்களுக்குப் போய் வந்தனர். பல இடங்களில் இராணுவ மண்தடைகளும் காணப்பட்டன.

கணிசமான மக்கள் தென்மராட்சி மற்றும் வடமராட்சிப் பகுதிகளிலிருந்து வன்னிப் பிரதேசங்களுக்கும் குடிபெயர்ந்தனர். அரசசார்பற்ற தொண்டு நிறுவன உதவிகளுடன் அப்பகுதிகளில் பாடசாலைகள் இயங்கின. ஏராளமான இடம்பெயர்ந்த ஆசிரியர்களும், மாணவர்களும் அங்குள்ள பாடசாலைகளில் இணைந்து கல்வி கற்க முனைந்தனர். மின்சாரம் இல்லாமல் வாழவும், கல்வி கற்கவும் மாணவர்களும், ஆசிரியர்களும் கற்றுக் கொண்டனர்.

இந்தப் பிரதேசங்களிலிருந்து தென்னிலங்கைக்கு பயணம் செய்வதற்கான தரைப் பாதைகள் தடைப்பட்டன. இராணுவ அனுமதிச்சீட்டு (Pass System) நடைமுறைக்கு வந்திருந்தது. அதிக பணச் செலவில் கொழும்புக்கான தனியார் விமான சேவைகள் இடம்பெற்றன. மண்ணெண்ணெய் ஒரு லீற்றர் அறுநூறு ரூபாயாகவும், சன்லைற் (Sunlight) சவர்க்காரம் முந்நூறு ரூபாயாகவும் விற்பனை செய்யப்பட்டன. அரச பாடசாலை ஆசிரியர்களின் சம்பளங்கள் காசோலையாக வழங்கப்பட்டன. அவற்றை கழிவு செய்தே ரொக்கத்தைப் பெற முடிந்தது. காசாக்குவதற்கு ஆசிரியர்கள் வியாபாரிகளிடமும், வங்கிகளிடமும், கூட்டுறவுச் சங்கங்களிடமும் அலைந்தனர். பல பாடசாலைகள் தனியார் ரியூட்டரிகளில் இயங்கின. கல்விச் செயற்பாடுகள் குற்றுயிரும், குலையுயிருமாக செயற்பட்டன. (தொடரும்)

## நாமும் நமது இல்லமும் 655

# வின்ஸர் நகரின் முன்மாதிரி



ராஜா மகேந்திரன், P.Eng.
raja@mahendran.ca
416.315.9397/416.321.6969

கனடாவின் நகரங்களில் உள்ள கட்டிடங்களில் உள்ள அலுவலங்கள் பலவும் வெறித்சோடி உள்ளன. (Higher Vacancy). முக்கிய நகரங்களின் நடுப் பகுதி (Downtown of city) அதிக காலி யிடத்தைக் கொண்டுள்ளன. குறிப்பாக ஒன்ராறியோவில் அமெரிக்காவிற்கு அண்மையில் இருக்கும் வின்ஸர் என்ற நகரம் அதிகளவு காலியிடத்தை (Highest Vacancy), கனடாவில் கொண்டுள்ள தாகத் தெரிய வருகின்றது.

இதனை எவ்வாறு மாற்றி அமைக்கலாம் என நகரின் கவுன்சிலர்கள் ஒரு தீர்க்க மான முடிவை எடுத்துள்ளனர். இந்த முடிவு சிறப்பாக இருக்குமாயின் கனடா வின் மற்றைய முக்கிய நகரங்கள் இந்த முறையை எதிர்காலத்தில் தெரிவு செய்யலாம். ஏற்கனவே இந்த எண்ணம் அமெரிக்காவில் இருக்கும் Detroit நகரத்தைப் பார்த்தே, தாம் இந்த முடிவை எடுத்ததாக வின்ஸர் நகரபிதா தெரிவித்துள்ளார்.

வின்ஸர் நகரம் கனடாவின் மூன்றாவது அதிக வியாபார வளர்ச்சியைக் கொண்டுள்ளதாகக் கனடியப் புள்ளி



விபரங்கள் தெரிவிக்கின்றது. எனினும் இந்தப் புதிய அலுவலக வியாபார நிலையங்கள் நகரின் மத்தியில் தமது அலுவலகத்தை அமைப்பதில் ஆர்வம் கொள்ளவில்லை. அத்துடன் ஏற்கனவே அலுவலகங்களை வைத்திருந்த வியாபார நிறுவனங்களும் மத்திய நகரத்தை விட்டு வெளியேறுகின்றன.

இந்தப் போக்கு (Trend) 90களில் தொடங்கிய போதிலும் கோவிட்-19இற்குப் பிற்பாடு மேலும் அதிகரிப்பைக் காணக் கூடியதாக இருக்கின்றது.

இதற்கு முக்கிய காரணம் வியாபார அலுவலக முதலாளிகளும், தொழில்புரி வோரும் தமக்குப் போதியளவு பாதுகாப்பு இல்லாமல் இருப்பதாகத் தாம் உணர்வதாகத் தெரிவிக்கின்றனர். பெரிய நகரங்களின் மத்திய பகுதியில் இவ்வாறான உணர்வு காணப்படுவது இயல்பே.

ரொறொன்ரோ, வன்கூவர், மொன்றியல் போன்ற நகரங்கள் பெரிதாக இருப்பதால் இவ்வாறான சில சம்பவங்கள் பெரிதாகக் கணக்கில் கொள்வது கிடையாது. குறிப் பாக, சிறிய நகரங்களில் ஒன்று, இரண்டு சம்பவங்களும் பெரிதாக இருப்பதாக கவுன்சிலர்கள் தெரிவிக்கின்றனர்.

| City | Vacancy Rate |
|---|---|
| Downtown – Windsor | 41.6% |
| London – Ontario | 28.1% |
| Waterloo Region | 22.5% |
| Nation Average Vacancy rate (Canada) | 18.4% |

எவ்வாறு நகரின் மத்திய பகுதியைச் சிறப்பாக்கி ஸ்திரப்படுத்தலாம் என எடுத்த முடிவுகளில் முக்கியமானதாக:

(1) அர்பணிக்கப்பட்ட (Dedicated) பாதுகாப்பு அலுவலர்களை மேலதிகமாக தொழிலிற்கு அமர்த்துவது.
(2) அதிகளவு கமராக்களை நகரம் முழுவதும் அமைப்பது.
(3) ஏற்கனவே இருக்கும் அலுவலகக் கட்டிடங்களை (Office Buildings) மக்கள் வாழ்வதற்காக மாற்றம் (Residential Buildings) செய்வது. மக்கள் எண்ணிக்கை அதிகரிக்க உணவகங்கள் மற்றும் அதற்கேற்ப மற்றைய வியாபாரங் களும் உருவாகும். இதனால் மக்கள் மீண்டும் நகரின் மத்திக்கு வருவர். என எதிர்பார்க்கப்படுகின்றது.

வின்ஸரிற்கு அண்மையில் அமெரிக்கப் பகுதியின் Detriot நகரத்தில் இந்த ஏற்பாடு சிறப்பாக செயல்படுகின்றது. Detriot காலியிடம் 1.7% ஆகவே காணப்படுகின்றது. கோவிட் காலத்திலும் அதிகமாக (ஆகக் கூடியதாக) 5% காணப்பட்டது.

இந்த வழிமுறை சிறப்பாகச் செயற்பட்டால் கனடிய நகரங்கள் இந்த வழிமுறையை தாமும் நடைமுறைப்படுத்தலாம்.

2023ஆம் ஆண்டு ஏப்ரல் மாதத்துடன் ஒப்பிடும்போது, இந்த வருடம் அதிகமான ஆதனங்கள் சந்தைப்படுத்தப்பட்டிருந்தன. பல ஆதன உரிமையாளர்கள் வசந்த

(தொடர்ச்சி 17ஆம் பக்கம்...)



# உலகம் ஏற்றுக்கொண்ட முதல் இந்திய மருந்து... தமிழரின் சாதனை!

**கண்ணன்**

அலெக்ஸாண்டர் ஃபிளம்மிங் கண்டுபிடித்த 'பென்சிலின்' மருந்து உலக சரித்திரத்தில் இன்றுவரை கொண்டாடப்படும் ஒரு பெரும் சாதனை. லட்சோப லட்சம் மனித உயிர்களை இன்றுவரையிலும் இந்த மருந்துதான் காப்பாற்றி வருகிறது. அது போன்ற ஒரு கண்டுபிடிப்பாக, மருத்துவத் துறையில் கடந்த சில நாட்களாகப் பேசப் பட்டுவரும் கண்டுபிடிப்பு, 'எக்ஸ்ப்லைஃபெப்' (Exblifep) எனும் மருந்து. சமீபத்தில், அமெரிக்க உணவு, மருந்து தரக்கட்டுப் பாட்டு நிறுவனம் (FDA), இதற்கு அங்கீகாரம் கொடுத்திருக்கிறது. இந்த மருந்தைக் கண்டுபிடித்திருப்பவர் தமிழ் நாட்டைச் சேர்ந்த ஒரு தமிழர் என்பது தான் இதில் நாம் பெருமைகொள்ளத்தக்க விடயம்.

### யார் அவர்? இந்த மருந்தில் அப்படி என்ன விசேஷம்?

திருநெல்வேலி மனோன்மணியம் சுந்தரனார் பல்கலைக்கழகப் பேராசிரியரும் உயிர் தொழில்நுட்பத்துறையில் மண்புழுவைக் கொண்டு உறுப்புகள் மறுஉருவாக்க ஆராய்ச்சி செய்து வருபவருமான, பேராசிரியர் சுதாகர் சிவசுப்பிரமணியம் அவர்களிடம் இது குறித்துக் கேட்டோம்.

### இனி சுதாகர் சிவசுப்பிரமணியம்;

"நாம் ஒரு நிலம் வாங்கினால் அதன் எல்லைகளை உறுதி செய்யவும் மற்றவர்கள் அத்துமீறி நுழையாமல் இருக்கவும் கல் நடுவோம் அல்லது வேலி அமைப்போம். மனிதர்களிடம் மட்டுமல்ல மற்ற உயிரினங்களிலும் இதுபோல தங்கள் எல்லைகளை உறுதி செய்யும் பழக்கம் இருக்கிறது. நாய்கள் தங்கள் அதிகாரத்திற்கு உட்பட்ட இடத்தின் எல்லைகளை தன் சிறுநீரினால் பதிவு செய்கின்றன. வேறு நாய்கள் எல்லையைக் கடந்து வந்தால், அங்கு நாய்கள் தங்கள் எல்லைக்குட்பட்ட இடத்தை தக்கவைக்க மூர்க்கத்தனமாகச் சண்டையிடத் தொடங்கிவிடும்!

நம் கண்ணுக்குத் தெரியாத நுண்ணுயிரிகளுக்கு இடையேயும் இதுபோல எல்லைத் தகராறு உண்டு. ஒரு துளி இரத்தம் தரையில் விழுந்தால் அது நுண்ணுயிரிகளான பாக்டீரியா, பூஞ்சைகளுக்கு விருந்து. அதனில் ஒரு பாக்டீரியம் முதலில் வந்து அமர்ந்து சாப்பாடு கிடைத்த மகிழ்ச்சியில் பல்கிப் பெருகத் தொடங்கும். கூடவே அவை உயிர்க் கொல்லியான ஆன்டிபயாட்டி ஒன்றை உற்பத்தி செய்யும். அந்த இரத்தத் துளி இந்த பாக்டீரியத்தின் கட்டுப்பாட்டுக்குள் வந்துவிடும். பிற நுண்ணுயிரிகள் இந்த இரத்தத்தில் வந்து அமர்ந்து அங்குள்ள இரத்தத்தைச் சாப்பிட முடியாது. காரணம் அங்குள்ள ஆன்டிபயாட்டிக் இதர நுண்ணுயிரிகளை வளர விடாது. அதனால் அந்த இரத்தத் துளியை அந்த பாக்டீரியாகள் மட்டுமே உண்டு மகிழ்கின்றன. மேலும் தன் இனத்தைப் பெருக்கிக்கொள்கின்றன.

**Real Estate & Property Management** துறையில் 32 வருடங்கள் அனுபவமுள்ளவரைத் தொடர்பு கொள்ளலாம்.

**கரு கந்தையா - 416.616.7278 Watson Property Management - 416.284.9999**

**We are managing Condos, Houses, Apartments in the area of Toronto, Markham, Ajax, Whitby, Oshawa, Clarington, Brampton, Hamilton, Beaverton, Trenton, and Kingston.**

# ஊழி – திரைவிமர்சனம்



ஆரணி ஞானநாயகன்

கனடியத் தமிழரால் இலங்கையில் எடுக்கப்பட்ட இப்படம், மே 10, 2024 அன்று திரையரங்குகளில் வெளியானது. இப்படம் போர் காலத்திலும் அதன் பின்னர் வந்த காலத்திலும் இலங்கையில் வாழும் தமிழருக்கு ஏற்பட்ட பிரச்சினைகளை எடுத்துக்காட்டும் ஒரு கற்பனைக் கதையாகும்.

இப்படம் காசிநாதன் என்ற இளைஞனின் வாழ்க்கையை 2009ஆம் ஆண்டிலிருந்து இன்று (2024) வரை காட்டுகிறது. மூன்று காலப்பகுதிகளில் அவரது வாழ்க்கையில் இருந்து காட்சிகள் மாறி, மாறிக் காட்டப்படுகின்றன.

காசி தனது பெற்றோர் மற்றும் தாத்தாவுடன் இலங்கையில் வாழ்ந்து வருகிறார். அவரது தந்தை ஓர் ஆசிரியர். தந்தையின் வகுப்பில் காசி படிக்கின்றார். 2009ஆம் ஆண்டில் புதிய வீட்டைக்கட்டும் காசியின் குடும்பத்திற்கு அங்குள்ள சிங்கள மக்களால் பிரச்சினை ஏற்படு கிறது. இப்பிரச்சினைக்கு காசியின் தந்தை தீர்வு காண முயல்கிறார்.

அவரது தந்தையால் தீர்வு காண முடியுமா? இல்லாவிட்டால் பிரச்சினை அதிகரிக்குமா? இப்பிரச்சினையில் வளரும்



காசி படிப்பில் கவனம் செலுத்துவாரா? இல்லாவிட்டால் பிற தமிழ் மாணவர் களுடன் சேர்ந்து போதைப் பொருளுக்கு அடிமையாவாரா? என விளக்குவதே இப்படத்தின் கதை.

புலம்பெயர் (கனடிய) தமிழரின் சுயாதீனமான தயாரிப்பாக இருந்தாலும், இப் படத்தின் வடிவமைப்பு, காட்சி, பாடல் போன்றவை நன்றாகவும், தெளிவாகவும் உள்ளன. இதனால், படத்தின் பொருள் கடினமாக இருந்தாலும் பார்க்கும் அனுபவம் இலகுவாக உள்ளது. அத்தோடு இலங்கைத் தமிழரின் நிலையைப் பற்றிய படம் இது என்றாலும், இதில் வழமை போன்ற கொடூரமான போர் அல்லது வன்முறைக் காட்சிகள் இல்லை. சில சண்டைக் காட்சிகள் இருந்தாலும் அவை தற்காலத் தமிழ்ப் படங்களுடன் ஒத்துப் போகின்றன.



பிரபல இந்தியத் தமிழ் தயாரிப்புகளுக்குப் பழகியோருக்கு இப்படத்தின் விறுவிறுப் பற்ற, நகைச்சுவையற்ற, தெளிவற்ற கதைப்போக்கு கடினமாக இருக்கலாம். எனவே இப்படம் கடினமான வாழ்க் கையைக் காட்டும் விரிவாகக் காட்டும் படம் என எதிர்பார்க்க வேண்டும்.

அப்படிப் பார்த்தால் புலம்பெயர் மக்களின் பணத்தால் ஏற்படும் நன்மையும், தீமையும் இலங்கையில் தமிழ் பெண்களதும், மாணவர்களதும் நிலை, போதைப் பொருட்களினால் வரும் விளைவு, போரின் விளைவு போன்ற கருத்துகள் நீண்ட உரைகள் இல்லாமல் காட்சி மற்றும் கதை மூலமாக இலகுவாக உணர்த்தப்படுகின்றன.

படக்கதை 2009, 2016, 2024 என்ற மூன்று காலங்களை மாற்றி மாற்றிக் காட்டும் விதம் தெளிவில்லாதபடியினால் பார்வை யாளர்களுக்குத் தொடக்கத்தில் விளங்குவது கடினமாக இருக்கலாம்.

சில காட்சிகளில் மட்டும் வீட்டில் நாள்காட்டி இருப்பதால் அதன்மூலம் காலத்தை அறிந்து, பின்பு அக்காலக் காட்சியில் நடிக்கும் காசி யார் எனப் பிடித்த பின்னரே படம் தெளிவாகிறது. அத்தோடு காசியின் எதிர்காலம் முன்கூட்டியே பார்வையாளர்களுக்குத் தெரிவதால் அவர்களுக்குக் கதையால் பாதிப்பும், விறுவிறுப்பும் குறைவடைகிறது. இருந்தாலும், எங்கும் எல்லோருக்கும் பொருந்தும் கல்வி மற்றும் போதைப் பொருள் சார்ந்த கருத்துகளையும், இலங்கையைச் சார்ந்த வரலாற்றையும் காட்டும் இப்படம் பார்க்க வேண்டியது. அத்தோடு புலம்பெயர் வாழ் தமிழரின் பணம் நன்மைக்கும், தீமைக்கும் பயன்படுத்தப்படும் விதத்தைக் காட்டும் இப்படம் புலம்பெயர் மக்கள் பார்க்க வேண்டிய படம்.

# கனடாவில் கோவிலூர் செல்வராஜனின் நூல் வெளியீடு



குரு அரவிந்தன்

தமிழ் வாசகர்கள் மத்தியில் நன்கு அறியப்பெற்ற எழுத்தாளர் கோவிலூர் செல்வராஜன் அவர்களின் நூல்கள் வெளியீட்டு மற்றும் அறிமுகவிழா சென்ற மே மாதம் 25ஆம் திகதி 2024அன்று கனடா ஸ்காபறோ நகரில் உள்ள பைரவி நுண்கலை மன்றத்தில் சிறப்பாக நடைபெற்றது. கனடா தமிழ் எழுத்தாளர் இணையத்தின் ஆதரவில் மேற்படி விழா விற்குத் தற்போதைய தலைவரும் கவிஞரு மான அகணி சுரேஸ் அவர்கள் தலைமை தாங்கினார்.

மங்கல விளக்கேற்றியதைத் தொடர்ந்து கனடா தேசியப் பண்ணும், தமிழ்த்தாய் வாழ்த்தும் பாடப்பெற்றன. அடுத்து நிர்மலா இரத்தினசபாபதி அவர்களின் வரவேற்புரையும், தொடர்ந்து அகணி சுரேஸ் அவர்களின் தலைமை உரையும் இடம்பெற்றன. அவர் தனது தலைமை உரையில் 'தமிழ் இலக்கிய வளர்ச்சியில் ஆர்வமும், ஈடுபாடும் கொண்டிருக்கும், இவரைப் போன்ற புலம்பெயர்ந்த படைப் பாளிகளை இனங்கண்டு அவர்களது ஆக்கங்களை வெளிக்கொண்டு வருவதில் கனடா தமிழ் எழுத்தாளர் இணையம் என்றும் முன்னின்று செயற்படும்' என்று குறிப்பிட்டார்.

அடுத்து திரு. சாமி அப்பாத்துரை, திருமதி. சுகல்யா ரகுநாதன், திரு. அ. தேவதாசன், உதயன் ஆசிரியர் திரு. ஆர். என். லோகேந்திரலிங்கம் ஆகியோ ரது வாழ்த்துரைகள் இடம்பெற்றன. தொடர்ந்து, 'நல்லது நடக்கட்டும்' என்ற சிறுகதைத் தொகுப்பிற்கு திருமதி. மேரி கியூரி போல் அவர்களும், 'கிழக்கிலங்கையின் மறைந்த இலக்கிய ஆளுமைகள்' என்ற கட்டுரைத் தொகுப்புக்கு திரு. தங்கராசா சிவபாலு



அவர்களும், இலக்கியத்தென்றல் 'பொன்விழா மலருக்கு' சிந்தனைப் பூக்கள் எஸ். பத்மநாதன் அவர்களும், 'கொத்துரொட்டி' சிறுகதைத் தொகுப்பிற்கு எழுத்தாளர் இணைய உபதலைவர் திரு. குரு அரவிந்தனும் நயவுரை வழங்கினர்.

குரு அரவிந்தன் தனது நயவுரையில் கொத்துரொட்டிக் கதைகள் பற்றிக் குறிப்பிட்டு, அனேகமான கதைகளில் கிராமிய பேச்சுவழக்கு இடம் பெற்றிருப் பதையும், மண்வாசனை, நாட்டுநடப்பு, குடும்பச்சூழல், பல்வேறு இனங்களுடன் நட்புறவைப் பேணுவது போன்ற விடயங் கள் இடம்பெற்றிருப்பதையும், வட மாகாணத்தில் ஆகக்கூடினால் உறவினர் களுடன் வேலிச்சண்டைதான் இடம்பெறும், ஆனால் கிழக்கு மாகாணத்தில் உள்ளோர் பல்லின மக்களையும் எதிர்கொள்ள வேண்டிய சூழலில் இருப்பதையும், கஞ்சி குடிப்பதற்குக்கூட பயந்து வாழவேண்டிய சூழ்நிலையில் இருப்பதையும் அன்றே இவர் தனது கதைகளில் எடுத்தாண்டிருப் பதையும் சுட்டிக்காட்டினார்.

கோவிலூர் செல்வராஜன் அவர்களைப் பற்றிச் சுருக்கமாகக் குறிப்பிடுவதானால், தற்சமயம் லண்டனில் வாழும் இவரது இயற்பெயர் செல்வராஜன் இராசையா.



இவர் ஓர் எழுத்தாளர், கவிஞர், ஈழத்துப் பாடகர், நடிகர, மற்றும் பத்திரிகை ஆசிரி யர். இலங்கை வானொலியில் நிகழ்ச்சித் தயாரிப்பாளராகவும், அறிவிப்பாளராகவும் இருந்த இவர் பல நாடகங்களிலும் பங்கேற்று நடித்துள்ளார். இவர் எழுதிய முதலாவது சிறுகதை 'விடியாத இரவுகள்' என்பதாகும்.

கனடா தமிழ் எழுத்தாளர் இணையத்தின் செயலாளர் கமலவதனா சுந்தா அவர் களின் நன்றியுரையைத் தொடர்ந்து கோவிலூர் செல்வராஜனின் ஏற்புரை இடம் பெற்றது. அவர் தனது ஏற்புரையில் வருகைதந்த அனைவருக்கும் மற்றும் விழாவைச் சிறப்பாக நடத்திய கனடா தமிழ் எழுத்தாளர் இணையத்திற்கும் நன்றி தெரிவித்திருந்தார்.

யோக சோதிடம்
கிரகப்பொருத்தம் பார்த்தல் சுபமுகூர்த்தம் கணித்தல்
சாதகக் குறிப்புக் கணித்தல் பலன் பார்த்தல்
தொடர்புகளுக்கு: 416.299.8361

# நம்பிக்கை எதனில்?

Words of Peace
பிறேம் ராவத் பற்றி மேலும் அறிந்துகொள்ள:
www.timelesstoday.com
www.premrawat.com

மக்கள் மக்கள்தான். ஆனால் உங்களது வாழ்க்கையிலேயே என்ன நடைபெறுகின்றது என்பதுதான் எல்லாவற்றிலும் பார்க்க மிகப்பெரிய விடயம்.

ஒரு விடயம் என்னவென்றால், நமது வாழ்விலே நம்பிக்கை நமக்கு இருக்க வேண்டும். ஏமாற்றம் அல்ல. அது மிகப் பெரிய விடயம். இல்லையென்றால் மனிதன் எவ்வாறு முன்னேற முடியும்?

ஆனால் இந்த நம்பிக்கைகள் பிழையான விடயங்களின் மேலே உள்ளனவா, போலியான விடயங்களில் மேலே உள்ளனவா, வெறுமனே கற்பனையான விடயங்களின் மேலேதான் உள்ளனவா அல்லது உண்மையான விடயங்களின் மேலே உள்ளனவா?

இது ஏதோ ஒரு சிறிய உண்மை அல்ல. ஆனால் முன்னர் இருந்த, இப்பொழுது இருக்கின்ற, எப்பொழுதுமே இருக்கும் உண்மை. அது சூழ்நிலையுடன் தொடர்பு இல்லாதது. நீங்கள் உயிருடன் இருக்கும் வரை, நான் கூறுகின்ற இறப்பு பிறப்பு என்னும் இரண்டு சுவர்களுக்கு இடையே நீங்கள் இருக்கும்வரை, அதுவரை எது உங்களது உண்மை? இந்த சூழ்நிலை முதலில் இருக்கவில்லை. இப்பொழுது இருக்கின்றது. எதிர்காலத்திலே இருக்கப் போவதில்லை. இது மாறத்தான் வேண்டும். ஆனால் உங்களது உண்மை என்ன?

அந்த உண்மையை அறிவதனாலே அந்த உண்மையை உணர்வதனாலே உங்களது வாழ்க்கையிலே நம்பிக்கை வரவேண்டும். நம்பிக்கை ஏற்பட வேண்டும். எப்படிப்பட்ட நம்பிக்கை என்றால் ஒரு பொழுதும் மாறாததிலே தங்கியுள்ள நம்பிக்கையாக இருக்க வேண்டும். உங்களைப் பொறுத்த அளவில் எது அந்த உண்மை? உங்களைப் பொறுத்த அளவிலே வந்து போகும் இந்த மூச்சுத்தான் அந்த உண்மை. இந்த மூச்சு உங்களின் உள்ளே வந்து போகும்வரை உங்களிடம் எல்லாமே உள்ளன. உங்களிடம் இல்லாத வற்றைக்கூட இந்த மூச்சு வந்துபோகும் வரை உங்களாலே பெறவும் முடியும். இந்த மூச்சும் இந்த வாழ்வில் எல்லாவற்றிலும் மிகப் பெரிய விடயமாகும்.

ஏனெனில் இது இன்றி நீங்கள் ஒன்றுமே இல்லை. இந்த மூச்சு வந்துபோகும் வரை உங்களது சொந்தங்கள் இருக்கும், உறவுகள் இருக்கும். இந்த முழு உலகமும் இருக்கும், உங்களது வேலைகள் இருக்கும், உங்களது வீடு இருக்கும். உங்களிடம் என்னவெல்லாம் இருக்கின்றதோ அவையெல்லாம் இந்த மூச்சு வந்து போவதனால்தான் உள்ளன.

உங்களது மூச்சு நிற்கும் பொழுது அதன் பின்னர் உங்களிடம் ஒன்றுமே இருக்காது. அதுதான் உண்மையிலேயே ஒன்றுமே இல்லாத நிலை. இந்த மூச்சு வந்து போகும்வரை உங்களுக்கு உங்களது வாழ்விலே நீங்கள் துர்பாக்கியசாலியா இல்லையா என உணரவேண்டிய தேவையில்லை.

நான் பலதடவை மகாபாரதம் மற்றும் ராமாயணம் பற்றிப் பேசி இருக்கின்றேன். ராமாயணத்தை எடுத்தோமென்றால், ராமரின் வாழ்க்கையை பார்த்தோம் என்றனர். அவர் பிறந்தார், பின்னர் விசுவாமித்திரர் வந்து அவரை கூட்டிச் சென்றார், அவருக்குக் கற்பிப்பதற்கும், சீதையின் சுயம் வரத்திற்கும் விசுவாமித்திரர்தான் கூட்டிச் சென்றார். திருமணம் முடிந்த பின்னர்; எல்லா சகோதரர்களுக்கும் திருமணம் நடந்தது. லட்சுமணன், சத்ருக்கனன், பரதன், ராமர் என எல்லோருக்கும். எல்லாம் பார்த்து நட்சத்திரங்களும் கிரகங்களும் பார்த்து சரியான நேரம் திருமணத்திற்கான முகூர்த்தம் வைக்கப்பட்டது. மிகவும் நல்ல நேரம் பார்த்து வைக்கப்பட்டது

ஆனால் அவ்வாறு நன்றாக நடக்கவில்லை. ஒருவருக்குமே நன்றாக நடக்கவில்லை. ராமர், சீதை, லட்சுமணன் பதினான்கு வருடங்கள் வனவாசம் சென்றுவிட்டனர். அது ஒரு சிறிய விடயமல்ல. லட்சுமணனுக்கும் திருமணம் நடந்திருந்தது. சொல்லுகிறார்கள் அவன் ஒரு வரம் கேட்டானாம். அவன் ராமரையும் சீதையையும் தான் காக்க வேண்டும் எனும் காரணத்திற்காக தன்னாலே நித்திரை கொள்ள இயலாது. எனவே அவன் தனது மனைவியிடம் எனக்காக நீ நித்திரை கொள் என்று சொன்னான். அதற்கு அவளும் ஆம், நான் நித்திரை கொண்டு கொண்டே இருப்பேன். அப்பொழுது எனக்கு உங்களது நினைவு ஏற்படாது என்று கூறினாள்.

எதிர்பாராத விடயங்கள் எல்லாம் நடந்தன. லட்சுமணன் மீது அம்பு பாய்ந்த பொழுது ராமருக்குத் துன்பம் ஏற்படவில்லையா? நிச்சயம் துன்பம் ஏற்பட்டது. எனவே அக் கதையிலே உள்ள இன்ப துன்பங்களை பார்த்தோமென்றால் ராமாயணத்தில் வர்ணிக்கப்பட்ட விடயங்களைப் பார்த்தோமென்றால் அதிலே இந்த இன்ப துன்பங்கள் வந்து போய்க்கொண்டு உள்ளன எனக் கூறப்படுகின்றது.

எந்த சூழ்நிலையில் நடக்கின்றது? அவர் வனவாசம் சென்றபொழுது நடக்கின்றது. அவருக்குப் பட்டாபிஷேகம் நடக்க இருந்தது. அது நடக்கவில்லை. பின்னர் அவருக்கு வனவாசம் செல்ல வேண்டியிருந்தது. வனவாசத்தில் மிகவும் கஷ்டம் ஏற்பட்டது. அந்தக் கஷ்டங்களின் மத்தியிலே, சீதை கடத்தப்பட்டார். ஒன்று என்று இல்லை. மேலும் நடந்தன. லக்ஷ்மணன் மேலே ராமருக்கு மிகுந்த அன்பு இருந்தது. போரிலே லக்ஷ்மணன் மேலே அம்பு பாய்ந்தது. இவ்வாறு ஒன்றன்பின் ஒன்றாக துன்பங்கள் ஏற்பட்டன. ஆனாலும் பார்க்க வேண்டிய விடயம் என்னவென்றால் அவர் அந்த சூழ்நிலையிலே என்ன செய்தார்? அவர் ஒரு படையை உருவாக்கினார். என்ன படை? யாருடைய படை? குரங்குகள் படையை உருவாக்கினார். பாலம் உருவாக்க முடியாத இடத்திலே பாலம் உருவாக்கினர். கற்களை மிதக்க வைத்து அதிலே 'ராம் ராம்' என எழுதி அந்தப் பாலத்தை உருவாக்கினர். பின்னர் இலங்கை தீவுக்கு உள்ளே சென்றனர்.

இந்த முழுக்கதையையும் பார்த்தால், ராமரிடம் எவ்வளவு தைரியம் இருந்தது எனத் தெரிகிறது. அத்தைரியத்தினாலே என்ன நடந்தது? அத்தைரியத்தில் இருந்து நம்பிக்கை பிறந்தது. விரக்தியல்ல.

மற்றும் இதனை நாம் கேட்டு, படித்து குறைந்தபட்சம் நாமும் நமது வாழ்விலே இவ்வாறு தைரியமாக இருக்க வேண்டும் என்பதனை புரிந்து கொள்ளக் கூடாதா? முன்னேறுவதற்கான தைரியத்தைக் கொண்டிருக்க வேண்டும். நமக்குப் பிரச்சினைகள் ஏற்படும்பொழுது அப் பிரச்சனைகள் பெரிய பிரச்சினைகள் அல்ல. நாம் துணிவுடன் இருந்தால் எந்த ஒரு பிரச்சினைக்கும் உரிய தீர்வை நாம் கண்டுகொள்ளலாம் என்பதனை நாம் மறந்து விடக்கூடாது. நாம் முன்னேறிச் செல்ல முடியும். இந்த மூச்சு வந்து போகும்வரை நம்மிடம் அந்தப் பலம் உள்ளது. ஆணவம் அல்ல, பலம்.

எல்லாவற்றிலும் மிகப்பெரிய விடயம் நாம் பயப்பட வேண்டிய தேவை இல்லை. அதுதான் மிகப்பெரிய விடயம். ஏனெனில் மனிதன் பயப்படும் பொழுது அவனுக்கு ஒன்றுமே தெரிவதில்லை. அப்பொழுது அவனாலே அந்த வெளிச்சத்தை காண முடியாமல் உள்ளது. எது உண்மையோ அதனை அவனால் புரிந்துகொள்ள முடியாமல் உள்ளது. அப்பொழுது அவனுக்கு எல்லாமே இப்பொழுது என்ன நடக்கும் என எண்ணத் தோன்றுகின்றது

நேரம் ஒரே வேகத்தில்தான் ஓடிக் கொண்டிருக்கின்றது. நேரத்தின் வேகம் மாறுவதில்லை. ஆனால் மனிதனுக்கு எல்லாம் முடிந்துவிட்டது என்று எண்ணத் தோன்றுகின்றது. அப்பொழுது அவன் செய்யும் செயல்களாலே எந்தவித மாற்றமும் ஏற்படப்போவதில்லை. அவன் தனது நேரத்தை வீணாக்கத் தொடங்குகின்றான். மனிதன் நேரத்தை வீணாக்கும் பொழுது ஒன்றுமே மிஞ்சப்போவதில்லை. ஏனெனில் நேரத்தை மீண்டும் பெற முடியாது. நேரம் எப்படியானது என்றால் ஒரு தடவை அதனை வீணாக்கினால் அது எப்பொழுதுமே வீணாகப் போய் விடும். இது நேரத்தை வீணாக்குவது பற்றியது அல்ல தைரியத்துடன் வேலை செய்வது பற்றியது. தீர்வு பெறமுடியாத விடயம் ஒன்றுமேயில்லை.

இது முன்னேறிச் செல்வதைப் பற்றியது. புரிந்து கொள்வதை பற்றியது. நம்பிக்கையுடன் வாழ்க்கையை கழிப்பது பற்றியது.

ஒரு விடயத்தையிட்டு அவதானமாக இருப்பது, பயப்படுவது, எச்சரிக்கையாக இருப்பது அவசியம். நீங்கள் ஒரு ரோட்டைக் கடப்பது என்றால் தெருவின் மறுபக்கத்திற்குப் போகப் போகிறீர்கள் என்றால் எச்சரிக்கையாகத்தான் இருக்க வேண்டும். ஆனால் பயம் ஏற்பட்டால் அதே இடத்திலேயே நின்று விடுவீர்கள். அப்படி நின்றால் பிரச்சினை ஏற்படும்.

## வின்ஸர் ...

08ஆம் பக்கத்தொடர்ச்சி

(இளவேனிற் காலம்) காலத்தில் வீட்டு வசதிக்கான தேவைகள் அதிகரிக்கப்படலாம் என எதிர்பார்க்கின்றனர். விற்பனை அதிகரிக்கலாம் என்றும் எதிர்பார்க்கின்றனர். எனினும் யூன் 05, 2024அன்றுகூட இருக்கும் கனடிய மத்திய வங்கியின் (Bank of Canada) கொள்கை வட்டி வீதத்திற்காகக் காத்திருக்கின்றனர். எவ்வாறான மாற்றம் நடைபெறும் என்பதனைப் பொறுத்தே அடுத்த நடவடிக்கையை அனேகமான வாங்குவோர் தொடங்குவர் எனத் தெரிய வருகின்றது.

பொதுவாக விற்பதற்காகப் போதியளவு ஆதனங்கள் சந்தையில் இருப்பதனால், வாங்குவோருக்குப் போதியளவு தெரிவுகள் இருப்பதாக இருந்தாலும் விற்போர், தமது விலையில் நெகிழ்வுத்தன்மையைக் காட்டுவதாகத் தெரியவில்லை. இதனால் ஏப்ரல் 2024இல் விற்கப்பட்ட விலை முந்திய ஆண்டின் விலையைவிட சற்று அதிகரிப்பதனைக் காணலாம். எதிர்பார்ப்பதுபோல வட்டி வீத இறக்கம் ஏற்படும்போது, விலை அதிகரிப்பை நிச்சயம் காணலாம். இதன் தாக்கத்தை 2025இல் காணக்கூடியதாக இருக்குமென TRREBஇன் ஆதனச்சந்தையின் தலைமை அதிகாரி ஜேசன் மேர்சர் (Jasen Mercer) தெரிவித்துள்ளார்.

மூன்றுமட்ட அரசுகளும் புதுப்புதுத் திட்டங்களை தெரிவிக்கின்றன. எவ்வாறு அதிக ஆதனங்களைச் சந்தைப்படுத்தவும், நுகர்வோர் இலகுவாக வாங்கக் கூடியதாகவும் இருப்பதற்காக திட்டங்கள் அறிவிக்கப்படுகின்றன.



இதனால் எதிர்காலத்தில் ஏற்படப்போகும் அதிக சனத்தொகை அதிகரிப்பைச் சமாளிப்பதற்காக இது இருக்கலாம். எனினும் இதன் உண்மையான தாக்கங்கள் எதிர்காலத்திலேயே தெரியவரும்.

2025இல் 500,000 புதியவர்களை கனடாவிற்குக் கொண்டுவர இருப்பதாக மத்திய அரசு தெரிவித்துள்ளது.

# கோவிலூர் செல்வராஜனின் 'கிழக்கிலங்கை ஆளுமைகள்'

## குமுளன்

கனடாவில் நடந்த நூல் வெளியீட்டில் த. சிவபாலு பி.எட்.சிறப்பு, எம்.ஏ. ஆற்றிய நூலாய்வுரை.

கனடா எழுத்தாளர் இணையம் இன்று நடத்தும் இந்த நூல்வெளியீட்டு ஏற்பாட்டின் நடுநாயமாக வீற்றிருக்கும் அதன் தலைவர் அகணி சுரேஷ் அவர்களே! இவ்விழாவில் தான் ஈன்றெடுத்த நூல்களின் அரங்கேற்ற நாயகனாக வீற்றிருக்கும் பல்கலை வித்தகர் கோவிலூர் தந்த முத்துச்சிப்பி செல்வராஜன் அவர்களே! செயலாளர் நாயகமாக அனைத்தையும் செயற்படுத்தும் தங்கை கமலவதனா அவர்களே! மற்றும் உறுப்பினர்களே! என்னோடு விருந்தாளர்களாக வந்துள்ள பெரியோர்களே! ஆதரவு தரவந்துள்ள பார்வையாளர்களே! விருந்தோம்பலால் என்னைத் திணறடித்துவரும் கிழக்கிலங்கை நண்பர்களே! மற்றும் ஊடகக் கலைஞர்களே, நண்பர்களே வணக்கம்.

முதலில் எழுத்தாளன் என்பவன் யார் என்பதுபற்றி வோட்ஸிமித் என்னும் அறிஞர் முன்வைத்த கருத்தோடு எனது ஆய்வுரையை ஆரம்பிப்பது பொருத்தமாக அமையும் என்பது எனது எண்ணம். "ஒரு எழுத்தாளன் என்பவன் எழுதிய சொற்கள் பல்வேறு வடிவங்களையும் நுட்பங்களையும் கொண்டு எண்ணக்கருத்துக்களைத் தொடர்புகொள்ள வைக்கின்றான். எழுத்துக்கள் இலக்கியக் கலைத்துவத்தைப் பல்வேறு வடிவங்களைக் கொண்டவை, புதினங்கள், சிறுகதைகள், கவிதைகள், நாடகங்கள், திரைக்கதைகள், கட்டுரைகள், வாக்குமூலங்கள், முறையீடுகள், செய்திக்கட்டுரைகள் என்பன பொதுமக்களின் விருப்பமானவையாகவும் இருக்கலாம். 'எழுத்தாளன்' சாதாரணமாக எழுத்து மொழியின் படைப்பின் வழி குறிப்பிடப்படுகின்றான்." எனக் குறிப்பிட்டுள்ளமையை இங்கு எழுத்தாள நண்பர் கோவிலூர் செல்வராசா அவர்களின் 'கிழக்கிலங்கையின் ஆளுமைகள்' என்னும் படைப்போடு இணைத்துப்பார்க்க முனைகின்றேன்.

நெருக்கடி மிகுந்த உலகத்தில் மன உளைச்சல், தாழ்வுச்சிக்கல் ஆகிய நெருக்கடிகளை எல்லாம் நீண்டகாலமாக புத்திஜீவிகள் அவதானித்து உணர்ந்து கொண்டு விட்டனர், உணர்ந்துகொண்டும் வருகின்றனர். ஆனால் அவர்கள் அதிகாரங்களுக்கு சேவகம் செய்கின்றனர் என்ற குறையும் முன்வைக்கப்படாமல் இல்லை.

கலைஞன், இலக்கியவாதி இத்தவிப்பை தீவிரத்துடன் உணர்ந்து கொள்கிறான். "அறிவாளிகளாக உள்ள படைப்பாளிகளை மதிப்பளித்து அவர்களிடம் உள்ளவற்றைக் கறவைப்பசுவிலிருந்து கறந்தெடுப்பதுபோன்று பெற்றுக்கொள்வதும் அதனை நாம் பெற்ற இன்பம் பெறுக இவ்வையகம் என மற்றவர்களுக்குக் கிடைக்கச்செய்வதும் எழுத்தாளர் இணையத்தின் முக்கிய பணிகளாகக் காணப்படுகின்றன. இன்னதென அறிகிலார் இவர் பிழையை மன்னியும்" என்று படைப்பாளியால் இருக்க முடியாது. அவர்கள் ஏதோ ஒரு வகையில் தங்களாலான துறைகளில் மக்களுக்கு சமுதாயத்தில் புரையோடிக்கிடக்கும் பிரச்சினைகளை அறிவுறுத்தி அவற்றில் இருந்து விடுபடும் மார்க்கத்தை எடுத்துக் கையாளுகின்றனர்.

இந்நூலைக் கையில் எடுத்தபோது கவிநாயகர் வி.கந்தவனம் அவர்களின் தலைமையில் இடம்பெற்ற வித்துவான் செபரத்தினம் அவர்களின் 'ஈழத்துச் சான்றோர்கள்' என்னும் நூல் வெளியீடு நினைவிற்கு வருகின்றது. அதில் 15 பேரறிஞர்களையும், 3 புலவர்களையும் காலக்கிரமத்தின் அடிப்படையில் 1899க்கு முன் பிறந்தவர்களை உள்ளடக்கியதாக அவரது 11ஆவது நூலாக வெளியிடப்பட்டது நினைவிற்கு வருகின்றது. அதனடிப்படையில் இன்று கோவிலூர் செல்வராஜனின் இந்தப் படைப்பைப் பார்ப்பதில் மகிழ்ச்சியாக உள்ளது. வித்துவான் செபரத்தினம் தொடர்ந்து தான் வாழ்ந்த காலப்பகுதிவரையில் தான் சந்தித்த, நேசித்த அறிஞர்களைப்பற்றி பின்னர் எழுதியிருந்தார்.

அதிபர் கனகசபாபதி அவர்கள் 'எம்மை வாழ வைத்தவர்கள்' என்னும் நூலில் யாழ்ப்பாணப் பாடசாலைகளில் அதிபர்களாக இருந்து கல்விக்காகத் தம்மை அர்ப்பணித்த அதிபர்கள் பற்றி எழுதிய பதிவு கல்வி வரலாற்றுப் பதிவாக அமைந்துள்ளமையையும் நினைவுறுத்தி, அவ்விதம் தொடர்ந்து ஏனைய அறிஞர்களையும் உள்ளடக்கித் தனது எழுத்துப் பணியைத் தொடர வேண்டும் என வினயமாக முன்வைக்கின்றேன்.

தங்கள் எழுத்தாக்கத்தை மேற்கொள்ளும் போது அவர்கள் எப்படி எழுதுவது, எழுதத் தூண்டும் கருவியாக யாருக்காக எழுதுவது. மற்றவர்கள் என்ன எழுதியுள்ளனர் என்பனவற்றை உதாரணம் காட்டி எழுதுவது எழுத்தாளரிடம் காணப்படுவதினைக் காணலாம்.

இவற்றைவிட கவிஞராக, பாடகராக, எழுத்தாளராக அறிமுகமாகி மக்களிடையே நன்கு அறியப்பட்டவர். பல்வேறு மக்களுடன் பழகிய அனுபவமும் மண்ணின் பற்றும் அவரிடம் நிறைந்தே இருக்கின்றது என்பதற்கு அவரது எழுத்துக்கள் கட்டியம் கூறி நிற்கின்றன. சுவாமி விபுலாநந்தர் மீது மாறாத பற்றுக்கொண்டவர். இந்தக் கட்டுரைத் தொகுப்பில் கிழக்கு மாகாணத்தில் உள்ள மூன்று வட்டங்களிலும் இருந்து தங்களது எழுத்துக்களால் இலக்கியப்பரப்பில் வலம் வந்து, தங்களது தமிழ் புலமையையும், ஆளுமையையும் வெளிப்படுத்திய தமிழ் எழுத்தாளர்கள், கவிஞர்கள், கலைஞர்கள் அதேபோல இஸ்லாமிய எழுத்தாளர்கள், கவிஞர்கள், கலைஞர்கள் ஆகிய 38 ஆளுமைகள் பற்றிய சிறு வாழ்க்கைக் குறிப்புகளும் பிறந்த மண், அவர்கள் படைத்திட்ட நூல்களும் பெற்ற விருது களும் சொல்லப்பட்டுள்ளன. ஒரு சிலர் கிழக்கு மாகாணத்திற்கு வெளியே பிறந்திருந்தாலும் கிழக்கு மாகாணத்தில் ஒட்டிக் கொண்டவர்கள். எஸ்.பொ., எப்.எக். சி.நடராஜா, மருதூர்க்கொத்தன்.

அவர் எடுத்துக்கொண்ட ஆளுமைகளின் பிறந்த மண் அல்லது வாழ்ந்த மண், அவர்களின் படைப்புக்கள், ஆற்றல்கள், பெற்ற விருதுகள், என்பனபற்றித் துருவித் துருவி ஆராய்ந்து வாசகர்களுக்குத் தந்து நல்லதோர் வரலாற்றுப் படைப்பாக்கியுள்ளார்.

தமிழரிடம் உள்ள குறைகளில் முக்கியமானது வரலாற்றைப் பதிந்துவைக்காது விடுதல். அந்தக் குறையை நிவர்த்தி செய்வதற்கு இத்தகைய நூல்களின் தேவை அத்தியாவசியமானவை மட்டுமல்ல வரலாற்றில் தமிழரின் நிலை எவ்விதம் இருந்தது என்பதனை எடுத்துக்காட்டும் ஆதாரங்களாகவும் இவை அமைந்து விடுகின்றன. தொல்காப்பியத்திற்கு அவரது சமகாலத்தவரான பனம்பாரணர் தந்த பாயிரம் சான்று பகர்வது போன்று இந்த நூல் ஒரு வரலாற்றாதாரமாக அமைகின்றது. ஒரு சிறுகதைத் தொகுப்போ, அன்றி நாவலோ அன்றி கட்டுரைத் தொகுப்போ அதன் காலத்து இலக்கியமாகப் பதிவானாலும் இத்தகைய நூல்கள்தான் வரலாற்று ஆதாரங்களாக இக்காலகட்டத்தில் இவர்கள் வாழ்ந்தனர், எதனைப் பதிவு செய்துள்ளனர் என்ற வரலாற்றைத் தருவனவாக உள்ளன என்பது கருத்திற் கொள்ளத்தக்கது.

கல்வியில் சிறப்புடையவனையே அரசு சமூகம் மதிக்கும் பண்பதை வலியுறுத்தும் பாடல் ஒன்று புறநானூற்றுப் பாடல் - 182 மிகத் தெளிவாக எடுத்துரைக்கின்றது.

உற்றுழி உதவியும் உறுபொருள் கொடுத்தும்
பிற்றை நிலை முனியாது கற்றல் நன்றே
பிறப்பு ஓர் அன்ன உடன் வயிற்றுள்ளும்
சிறப்பின் பாலால் தாயும் மனம் திரியும்
ஒரு குடிப்பிறந்த பல்லோருள்ளும்
மூத்தோன் வருக என்னாது அவருள்
அறிவுடையோன் ஆறு அரசும் செல்லும்
வேற்றுமை தெரிந்த நாற்பாலுள்ளும்
கீழ்ப்பால் ஒருவன் கற்பின்
மேற்பால் ஒருவனும் அவன் கண்படுமே"

என கற்றவனின் உயர்வையும் சிறப்பையும் குறிப்பிடுவதுபோன்றே குறள் தந்த வள்ளுவனாரும்
"ஒருமையிற் தான் கற்ற கல்வி
ஒருவர்க்கு எழுமையும் ஏமாப்புடைத்து"
என்றுரைத்தார். தான் கற்ற கல்வியால் ஆனவையே நண்பர் கோவிலூர் செல்வராஜனின் படைப்புலகம் என்பது அவரது படைப்புக்களையும் செயல்களையும் அவதானிக்கும்போது தெற்றெனத் தெரிகின்றன.

நூலெனப்படுவது நுவலுங் காலை
முதலும் முடிவும் மாறு கோளின்றித்
தொகையினும் வகையினும் பொருண்மை காட்டி
உண்ணின் றகன்ற உரையோடு புணர்ந்து
நுண்ணிதின் விளக்கல் அதுவதன் பண்பே" (செய்யுளியல் 159) என்னும் தொல்காப்பிய நெறியினை ஒப்பிட்டு நோக்கத்தக்கதாக அவர் எடுத்துக் கொண்ட விடயத்தை நூலின் பத்தழகுகள் எனப்படும்.

இந்த நூல் எழுதப்பட்டதற்கான காரணத்தை அவர் தனது 'எனதுரையில்' கல்முனை நெற் பத்திரிகை ஆசிரியரின் வேண்டுகோளைச் செவிமடுத்து எழுதியுள்ளமையை அறியமுடிகின்றது. இக்கால சமூகத்திற்கு எம்முன்னோரை மறந்துவிடாமல் நினைவுறுத்தும் வகையில் இதில் உள்ள 38 படைப்பாளிகளைப் பற்றி ஏற்கனவே எழுதியிருந்தாலும் அதுபற்றி மீட்கப்படவேண்டும் என்னும் எண்ணத்தியல்பாக இது வெளிப்பட்டிருக்கின்றது. நாம் ஏன் திருவள்ளுவரை, தொல்காப்பியரை, கம்பரை, இளங்கோவை, சீத்தலைச் சாத்தனாரை, திருத்தக்கதேவர் போன்ற காலத்தால் அழியாதோரை மீட்டுப் பார்க் கின்றோம். அவர்களின் படைப்பாற்றலே அவ்விதமே கிழக்கிலங்கையில் கிளர்ந்த இந்தப்படைப்பாளிகளை மீட்டுப்பார்ப்பது அவர்களுக்குச் செய்யும் நன்றிக்கடன் மட்டுமல்ல எங்கள் வரலாற்றை மீட்பதும் எமது எதிர்கால சந்ததியினரிடம் கடத்துவதும் மிக முக்கிய பணிகளாக உள்ளன. அதனைச் செய்யப் புகுந்துள்ள இன்றைய கதாநாயகன் கோவிலூர் செல்வராஜன் பாராட்டிற்குரியவரே! அவரை எத்துணை பாராட்டினாலும் தகும்.

சிறுகுற்றமும் இல்லாமல் கருதிக்கருதி எழுதப்பட்டதிந்நூல். முன்னாளில் அரங்கேற்றம் என்ற ஒன்று இருந்ததால், ஒருவர் தமது நூலைப் பலகால் சிந்தித்து, நன்கு உருவாக்கிய பின்னரே வெளிப்படுத்தும் முறைமை இருந்தது. நினைத்ததும் நினைத்ததை எழுதி, நினைத்தவாறு வெளியிடுதலால் நூல்கள் பிழை மலிந்து, வலுவிழந்து, தோன்றிய சில நாட்களிலேயே போய் ஒழிகின்றன. தொல்காப்பிய நுட்பத்திறன்கள் பல இன்னும் கண்டு கொள்ளப்படவில்லை. சுருங்கச் சொல்ல வேண்டும் பல பக்கங்களில் விரித்துரைக்க கூடியவற்றைச் செவ்வன் ஆடியிற் செறித்து இனிது விளக்க வேண்டும், பல இடங்களில் கூறியவற்றை ஒருங்கிணைத்தும் கூறியவற்றை வைத்துக் கூறாத வற்றை உணருமாறும் செய்தல் ஏற்புடைத்து ஆகும் என இவ்வாறு தம் இலக்கண நூலை நடத்திச் செல்லும் தொல் உத்திகள் பலவாகும். குற்றமற்ற நூலென்பதும் குணங்கள் நிறைந்ததென்பதும் அடங்கவே இந்நூலுக்குப் போக்கறு பனுவல் எனச்சான்றிதழ் வழங்கினார் பனம்பாரனார்.

அந்த வகையில் நல்ல நூலின் ஆக்கத்திற்கு வித்திட்டு வரையறைதந்த தொல்காப்பியன் வழியிலே ஒருநூல் எவ்விதம் அமையவேண்டும் அது வாசகர்களை மனங்கொள்ள வைக்கவேண்டும் என்னும் எண்ணக்கருவை தன் மனதில் வைத்து எழுதப்பட்ட நூலாக நான் இதனைக் காண்கின்றேன்.

(தொடர்ச்சி 20ஆம் பக்கம்...)

# ஒருவருக்கு எதிரான வாகன விபத்து வழக்குக்கு அச்சப்படத் தேவையில்லை



சிவ. பஞ்சலிங்கம், B.Com.,
(Licensed Insurance Broker)
காப்புறுதி சம்பந்தமான ஆலோசனைகளுக்கு
416.321.0999

கனடிய வாழ்வில் என்றோ ஒரு நாள் ஏதோ ஒரு வாகன விபத்தில் ஒருவர் சிக்கியிருக்கலாம்.

அந்த விபத்தில் அவர் 100% தவறுக் குரியவர் (100% at Fault) என்ற நிலையில் இருந்திருக்கலாம்.

காலம் கடந்து சில காலங்களின் பின்பு அவருக்கு எதிராக பெரும் தொகையில் பாதிக்கப்பட்டவர் சார்பில் நீதிமன்றத்தில் நட்டஈடு கோரி வழக்குத் தொடர்ந்த பல பக்க ஆவணப் பத்திரங்கள் வீடு தேடி வந்திருக்கும்.

இந்த நிலைமையில் அவரின் அடுத்த கட்ட நிலைப்பாடு என்ன? இதுவே நாம் இன்று அலசப்போகும் தகவலாகும்.

விபத்து நடந்த நாள் அவர் வாகனத்துக்கு வலிமையான காப்புறுதி வைத்திருந்தால், இந்த வழக்குப் பத்திரத்துக்கு அவர் என்றுமே அச்சப்படத் தேவையில்லை. இதற்காக எந்தவொரு செலவுகளினையும் அவர் மேற்கொள்ளத்தேவையில்லை.

அவரின் வாகனக் காப்புறுதியில் ஏனையோருக்கு விபத்தில் ஏற்படும் பாதிப்பு களுக்கு நட்டஈடு வழங்கும் 'பொறுப்பு காப்புறுதி பிரிவு' (Liability coverage) இருந்திருக்கும். அதற்கும் சேர்த்தே அவர் கட்டணம் செலுத்தி வந்திருப்பார். இவ் வழக்கில் அவருக்காக வக்கீலினை அமர்த்தி வாதாடுவது, நீதிமன்ற செலவு கள் உட்பட முடிவு செய்யப்படும் பெரும் தொகை நட்டஈட்டினை வழங்குவது போன்ற எல்லா விடயங்களையும் அவரின் வாகனக் காப்புறுதிக் கம்பனியே பார்த்துக்கொள்ளும்.

அவருக்கு அனுப்பப்பட்ட பத்திரங்களின் பிரதிகளினை எடுத்து வைத்துக்கொண்டு, அந்தப் பத்திரங்களினை அவரின் வாகனக் காப்புறுதிக் கம்பனியிடம் சமர் பித்துவிடல்வேண்டும். அவர்கள் அதனைப் பார்த்துக்கொள்வர். ஏதாவது தகவல் தேவைப்படின் அவரை சாட்சி சொல்லக் கேட்பார்கள். அதற்கு ஒத்தாசை வழங்கினால் சரி.

'Tort claim' என ஆங்கிலத்தில் குறிப்பிடப்படும் இப்பெரும் தொகை நட்ட ஈடு கோரல் வழக்கில், விபத்தில் பாதிக்கப்பட்டவர் நிரபராதியாக இருந்து, உடல் காயம் என்பது அவரின் வாழ்வில் இயங்கு சக்தியினை ஏதாவது வழியில் நிரந்தரமாகப் பாதிக்குமளவில் (Catastrophic impairment) உள்ளது என்பது கம்பனியின் மருத்துவ புலனாய்வுகளில் சந்தேகத்துக்கு அப்பால் நிரூபிக்கப்படும் போதே இப்பெரும் தொகை நட்டஈடு கிடைப்பதற்கு சாத்தியமாகலாம்.

ஆனால் இந்தச் சந்தர்ப்பத்தினைப் பயன் படுத்தி உடல் காயங்களில் நிரந்தரமாக வாழ்வின் இயங்கு சக்தியினை பாதிக்கு மளவுக்கு பாதிப்பில்லாதோர் பெரும் தொகை நட்டஈடு பெறலாம் என நினைத்து வழக்குத் தொடர முயற்சிப்பது பல இடங்களில் நடந்துள்ளது.

ஆனால் நீதிமன்றம் எல்லா கோரிக்கை களினையும் ஏற்றுக்கொள்ளப் போவது மில்லை. காப்புறுதி கம்பனிகளும் கண்ணை மூடிக்கொண்டு பணத்தினை நட்டஈடாக வழங்கப்போவதுமில்லை.

# உலகம்...

11ஆம் பக்கத்தொடர்ச்சி

அதனால் இந்த மருந்து பல்வேறு நாடுகளில் மக்கள் பயன்பாட்டிற்கு அனுமதி கிடைக்குமளவு முன்னேற்றம் கண்டிருக்கிறது.

மேற்கண்ட மூன்று சோதனைகளையும் செய்ய ஆயிரக்கணக்கான கோடி ரூபாய்கள் செலவாகும்! இந்த பெரும் செலவுகளை செய்ய 'அலக்ரா' (Allecra) என்ற ஜெர்மானிய நிறுவனம்தான் முன்னுக்கு வந்தது. பின்னர் இந்த நிறுவனம் அட்வான்ஸ் ஃபார்மா என்ற ஒரு நிறுவனத்திடம் மேற்கண்ட சோதனைகளை ஐரோப்பிய கண்டத்தில் முடிக்க ஒப்பந்தம் செய்தது. இந்த நிறுவனத்திடமே டாக்டர் செந்தில் குமாரால் உருவாக்கப்பட்ட 'எக்ஸ்ப்லிபன்' என்ற மருந்தின் விற்பனை உரிமை இருக்கிறது.

"ஏன் இந்த மூன்று முக்கிய சோதனை களையும் இந்தியாவில் செய்யவில்லை?" என்ற என் மனதிலும் எழுந்த கேள்வியை டாக்டர் செந்தில் குமாரிடம் கேட்டேன்.

"பல ஆயிரக்கணக்கான கோடி ரூபாய்கள் செலவு செய்து மூன்று கட்ட சோதனைகளையும் செய்து முடிக்கத் தகுந்த நிதி வளம் நிறைந்த நிறுவனங்கள் எதுவும் அப்போது இந்தியாவில் இல்லை. இப்போதுதான் இத்தகைய நிறுவனங்கள் இந்தியாவில் உருவாகி வருகிறது" என்றார் டாக்டர் செந்தில் குமார்.

"இந்த மூன்று பரிசோதனைகளில் ஒரு புது மருந்து மனித உடலுக்கு ஏதாவது வகையில் கேடு விளைவிக்கிறது" என்று கண்டறியப்பட்டால் சோதனையில் ஈடுபடும் நிறுவனத்திற்கு சில ஆயிரம் கோடி ரூபாய்வரை இழப்பு ஏற்படும். அதே வேளையில் அந்த மருந்து அனைத்து சோதனையிலும் மனித உடலுக்குத்



தீங்கற்றது என நிரூபிக்கப்பட்டால் சோதனையில் பங்கேற்ற நிறுவனங்கள் நிறைய லாபமீட்ட முடியும்.

அலக்ரா நிறுவனம் எக்ஸ்ப்லிபன் மருந்தைச் சீனாவில் விற்பனை செய்ய அனுமதி அளித்தது. இந்த வகையில் மட்டும் அலக்ராவுக்கு 620 கோடி இந்திய ரூபாய் வருவாய் கிடைத்துள்ளது.

அலக்ராவுடனான ஒப்பந்தப்படி ஆர்க்கிட் ஃபார்மாவுக்கு உலக அளவிலான விற்பனையில் ஆறு முதல் எட்டு விழுக் காட்டுப் பங்கு கிடைக்கும்! இதனால் மட்டும் ஆர்க்கிட் நிறுவனத்திற்கு ஆண்டுக்கு தோராயமாக 100 முதல் 200 கோடி ரூபாய்வரை வருட வருமானம் கிடைக்கும் என்று கணக்கிடப்படுகிறது. மேலும் இந்தியாவில் இந்த மருந்தின் விற்பனையின் முழு உரிமையும் ஆர்க்கிட் நிறுவனத்திடமே உள்ளது. அதனால் ஆர்க்கிட் நிறுவனம் விரைவாக வளர்ச்சி அடையும். இதனால் சென்னையில் உள்ள ஆர்க்கிட் ஃபார்மாவின் பங்குச் சந்தை மதிப்பு 25%க்கு மேல் வேகமாக உயர்ந்துள்ளது.

கோபியில் வாழ்ந்த விவசாயியான திரு. O.S. பழனிச்சாமி-கண்ணம்மாள் தம்பதியர் தான் 1966ஆம் ஆண்டு டாக்டர் செந்தில் குமாரை பெற்றெடுத்தனர். டாக்டர் செந்தில் குமார்-நந்தினி தம்பதிக்கு இரண்டு பெண் குழந்தைகள். முதல் பெண் ப்ரணீதாஸ்ரீ பல் மருத்துவம் பயின்று வருகிறார். இரண்டாவது பெண் குழந்தை ஜெயசிதாஸ்ரீ இப்போது எட்டாவது படித்து வருகிறார்.

டாக்டர் செந்தில் குமார் சமீபத்தில் முருகப்பா குழுமத்தின் மருந்து ஆராய்ச்சி மேம்பாட்டுப் பிரிவில் ஆராய்ச்சியாளராக இணைந்திருக்கிறார்.

"டாக்டர் செந்தில் குமாரின் கல்வி, ஆராய்ச்சிப் பயணம் தமிழ்நாட்டில் தமிழைப் பயிற்று மொழியாகக் கொண்ட எளிய மாணவ மாணவிகளுக்கு தன்னம் பிக்கையும் உற்சாகத்தையும் கொடுக்கும் என்பதில் மாற்றுக் கருத்து இருக்க முடியாது" என்கிறார் பேராசிரியர் சுதாகர் சிவசுப்பிரமணியம்.

# கவிதையஞ்சலி! அமரர் கவிஞர் அம்பி

கற்றாருக் கினியதொரு நண்பனாய்!
காலமெலாம் நிலைத்துநிற்கப் புலம்பெயர் நாட்டில்
வற்றாது வண்ணத்தமிழ் மொழியும் வாழ
வடிவமைத்துத் திட்டங்கள் வரைந்து நின்றாய்!
தற்பெருமை சிறிதுமின்றிச் சுற்றம் போற்றத்
தவநெறியில் வாழ்வாங்கு வாழ்ந்து உயர்ந்தாய்!
பற்றறுத்தாய்! சிற்சபையோன் பாததா மரைகள்
பரந்துகாலுஞ் சோதிதனிற் கலந்தாய் சாந்தி!

கள்ளமிலா வெள்ளைமனங் கொண்ட அன்ப!
கவியரங்கம் பலகண்டோம் மறக்கப் போமோ?
அள்ளவள்ளக் குறையாது ஆயிரம் பிறைகள்
அன்பநீயும் கண்டுநின்றுந் தமிழ்ப் பணியாய்
உள்ளமுவந் தாற்றியவுன் பங்க ளிப்பை
உன்நினைவாய் என்றென்றும் நினைவு
கூர்வோம்!
மெள்ளத்தான் மூடியதோ விழிகள் பரமன்
விரைமலர்த்தாள் நாடியதோ சாந்தி சாந்தி!
தஞ்சமளித் திட்டஅவுத் திரேலி யாவில்
தடம்பதித்துத் தமிழ்கற்று வாழும் எங்கள்
பிஞ்சுமழ லையர்க்கென்றே பெரிதும் உவந்து
கொஞ்சும்மொழி "தமிழ்தந்தாய்! குவல யத்தில்
விஞ்சுபுகழ் பெற்றதமிழப் புலவ ரேறே!
வேண்டிடாப் பிறப்பறுக்க விழைந்த உன்னை



அஞ்சுமுகன் அழைத்தனனோ அகலா இன்பம்
அரனடியிற் பெற்றுவிட்டாய் தெய்வம் தானே!



'சிவஞானச் சுடர்' பல்மருத்துவக் கலாநிதி பாரதி இளமுருகனார்

For your Special Occasions
SHORT TERM RENTAL
TORONTO
Large House available for your Special Occasions Short Term Rental in Scarborough. Daily rental possible.
If Interested email :
georgeparan1@gmail.com



# கோவிலூர்...

18ஆம் பக்கத்தொடர்ச்சி

இந்த நூலில் உள்ள 38 படைப்பாளிகளில் பெரும்பாலானோர் எனக்குப் பரிட்சய மானோர். சிலரோடு கூடிக்குலாவி மகிழ்ந்துள்ளேன். அந்தவகையில் ஈழத்துப் பூராடனார் முதனிலை வகிப்பார். மிக நெருக்கமாகப் பழகும் வாய்ப்புக் கிட்டியது. அவரது இல்லத்திற்கும் பல தடவை சென்றிருக்கின்றேன். இன்றும் அவரது புதல்வரோடு தொடர்பில் உள்ளேன்.

எஸ்.பொவிற்குக் கனடா இலக்கியத் தோட்டம் விருதிற்காக வந்திருந்தவேளை கனடாத் தமிழ் எழுத்தாளர் இணையம் அவரை மதிப்பளித்தது. அவருக்காக ஒரு பாராட்டுக் கூட்டத்தை ஏற்பாடு செய்திருந்தோம். அதற்கு நான் தலைமை தாங்கியது பெருமையாக இருந்தது. கவிஞர் திமிலைத் துமிலனின் கவிதை நூல்களையும் தலைமைதாங்கி வெளியீடு செய்ததும் நினைவிருக்கின்றது.

இந்த நூலில் இடம்பெறாத வித்துவான் செபரத்தினம், வித்துவான் ஞானரத்தினம், திரு. இளையதம்பி தங்கராசா. பேராசிரியர் இளையதம்பி பாலசுந்தரம், திரு. மதிபாஸ்கரன் கணபதிப்பிள்ளை ஆகியோரின் நூல்கள் வெளியீட்டிலும் கலந்து உரையாற்றியும் சிலவெளியீடுகளில் தலைமை தாங்கியும் உள்ளேன். அவர்களும் கிழக்கிலங்கை தந்த சிறந்த படைப்பாளிகளேயாவர். அவர்களைப் பற்றியும் எதிர்காலத்தில் எழுதவேண்டும் என நண்பர் கோவிலூர் செல்வராஜனைக் கேட்டுக்கொள்ள விளைகின்றேன்.

எழுத்தாளன் என்பவன் எழுத்தால் இணைபவன் மட்டுமல்ல எல்லோரையும் இணைப்பவன் அந்தப்பணியினைக் கோவிலூர் நன்றாகச்செய்திருக்கின்றது. இந்த நூலில் கிழக்கிலங்கையின் இஸ்லாமிய எழுத்தாளர்கள் உள்வாங்கப்பட்டுள்ளனர் என்பதைப் பார்க்கும்போது இன, மத பேதங்களைக் கடந்து தமிழால் இணையும் பாங்கை அவர் வெளிப்படுத்தியுள்ளார்.

கவிதையால், பாட்டால், பாடும் திறத்தால், எழுத்தால் எனப் பலதிறப்பட்ட முனைப்பு களால் அவர் தன்னை முதநிலைப்படுத்தி நிறுத்தியிருக்கின்றார். எழுத்தாளராக, கலைஞராக, வானொலி, தொலைக்காட்சி ஊடகராக வாழ்ந்து எல்லோரதும் நன்மதிப்பைப் பெற்றுக்கொண்ட ஒருவரின் நூல்வெளியீட்டில் கலந்துகொண்டமை பெருமையைத் தருகின்றது.

இன்றுபோல் நலமாக இருந்து தொடர்ந்து தனது பணிகளை ஆற்ற வேண்டும் என்பதே எமது விருப்பமாகும். தொடர்வார், தொடர வேண்டும் எனும் நம்பிக்கையோடு விடைபெறுகின்றேன்.





1989

2024

*President:* Nel Ketharanathan (416) 677-4707
*Vice President:* Thiva Kulasingam (647) 822-3270
*Secretary:* Chithra Kumarasamy (647)261-8428
*Asst. Secretary:* Suresh Tharmalingam (416) 801-3863
*Treasurer:* Soundari Vigneshwaran (647) 969-0861
*Asst. Treasurer:* Mayooran Somanathan (647)920-0106
*Exec. Comm. Members*
Dr. E. Balasundaram (416)267-5255
Gurunathan Thevarajan (416)892-3249
Ambika Kumarasamy (647)914-1401
Suhumar Nadarajah (416) 388-0967
Dr. V. Manivannan (416) 609-1998
S. Ramachandran (416) 760-2183
Bashkaran Ramanathan (647)889-2165
Yaso Somalingam (416) 854-2485
Suganja Sinnathamby (416) 557-1081
Sivanesan Sinniah (416)888-8950
Sivage Sivagumaran (416)553-8902
Dr. Senthuran Sivasothy (226)606-9991
Athithan Thananchayan (416)315-3464
Raj Thavaratnasingam (416) 522-9972

## Association of Sri Lankan Graduates of Canada

45 Mondeo Drive, Toronto, Ontario. M1P 5B6

**Non Profitable Organization (Ontario Registration no. 1701688)**

May 24, 2024

Dear Member,

**ASGC Annual General Meeting - 2024**

The Annual General Meeting will be held on Sunday **June 23**, **2024**, at 80 Travail Road, Units #1&2, Markham, Ontario, L3S 3J1, (CTCC Office) at **10:30 am**. All the members are requested to attend the AGM.

**AGENDA:**

1. Welcome Address by the President
2. Minutes of the Last AGM and Approval
3. Annual Report by the Secretary
4. Treasurer's Report
5. Election of Office Bearers for the Year 2024-25.
6. Vote of Thanks by the Secretary

The meeting is open to all life members and other members who have been registered with the Association. Registered members approved by the Association prior to the AGM only can participate in the election of office bearers. The minutes of the last AGM and treasure's report will be distributed among the members before the commencement of the meeting.

Any resolutions or motions for discussion at the AGM must be submitted prior to the meeting and should reach me on or before June 16, 2024, by email.

Thank you.

Yours sincerely,

Suresh Tharmalingam
Honorary Assistant Secretary

**Visit our website:** ***www.asgc.ca***


**நம் கோபங்களின் அர்த்தம் புரியாதவர்களுக்கு**
**நம் பாசத்தின் ஆழம் புரியாது...**
**அவர்களிடம் கோபத்தை காட்டுவதும் வீண்...**
**பாசத்தை எதிர்பார்ப்பதும் வீண்...**




